# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி
மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்
சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 6233/ 2008 / எம்சி. 8 நாள் : 21.5.2008**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற **28.5.2008** புதன்கிழமை காலை **10.30** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

21.5.08
மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மே 2008 மாமன்ற சாதாரண கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| 1 | நகரமைப்புப் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 64 –சேர்மன் ராஜு நகர் -சாலை அமைக்க நில ஆர்ஜிதம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 2 | வருவாய் பிரிவு - சொத்துவரி – பொது சீராய்வு - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 3 | பொதுப்பிரிவு-உடல் ஊனமுற்ற குழந்தைகள் நல சங்கம் - நன்கொடை வழங்குதல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 4 | Jnnurm-பில்லூர் II –ம் குடிநீர் திட்டம் -பகுதி II பணி – மறுஒப்பந்தப்புள்ளி கோருதல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 5 | Jnnurm-பில்லூர் II –ம் குடிநீர் திட்டம் -பகுதி IV பணி – மறுஒப்பந்தப்புள்ளி கோருதல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 6 | Jnnurm-பில்லூர் II –ம் குடிநீர் திட்டம் -பகுதி VI பணி – மறுஒப்பந்தப்புள்ளி கோருதல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 7 | Jnnurm-பில்லூர் II –ம் குடிநீர் திட்டம் -பகுதி III பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 8 | Jnnurm-பில்லூர் II –ம் குடிநீர் திட்டம் -பகுதி V பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 9 | பொறியியல் பிரிவு -தெற்கு மண்டலம் - வார்டு எண் 12-நஞ்சுண்டாபுரம் ரோடு கிழபுறம்-மழைநீர் வடிகால் கட்டுதல் -ரூ.25 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 10 | மேற்கு மண்டலம் -சாஸ்திரி மைதானம் -கிரிக்கெட் போட்டி நடத்த அனுமதிக்கப்பட்டது – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 11 | நகரமைப்புப் பிரிவு -ரேஸ்கோர்ஸ் பகுதி – பந்தயசாலை-வணிக உபயோகம் மற்றும் அடுக்குமாடி கட்டிடங்கள் தடை செய்தல் -ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டது – பிரகடனம் செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 12 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 2-எல்லைத்தோட்டம் தொடர்ச்சி – மழைநீர் வடிகால் கட்டுதல் பணி-ரூ.16.80 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 13 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 71-கணபதி ஜெயப்பிரகாஷ் நகர் - மழைநீர் வடிகால் கட்டுதல் பணி -ரூ.18. இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 14 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 65-தேமையன் வீதி மற்றும் கருப்புசாமி நகர் பகுதி – மழைநீர் வடிகால் கட்டுதல்-ரூ.24.80 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 15 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 1-பி.ஆர்.பி. கார்டன்- சுற்றுச்சுவர் அமைத்தல் பணி -ரூ.20. இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 16 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 72-கே.ஆர்.ஜி. நகர் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டுதல் -ரூ.20 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 17 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 14-உடையாம்பாளையம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி-அபிவிருத்திப்பணிகள் செய்தல் -ரூ.25 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 18 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 11-வரதராஜபுரம் மாநகராட்சி உயர் நிலைப்பள்ளியில் வகுப்பறைகள் கட்டுதல் -ரூ.25 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 19 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 23-50 அடி ரோடு தார்தளம் அமைத்தல் -ரூ.19 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 20 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 24-நஞ்சுண்டாபுரம் ரோடு மேற்குப்பகுதி -மழைநீர் வடிகால் அமைத்து நடைபாதை அமைத்தல் -ரூ.24.50 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 21 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 24-80 அடி ரோடு முதல் நஞ்சுண்டாபுரம் சாலை வரை உள்ள வடிகாலில் மூடுபலகை அமைத்தல்-.ரூ. 18 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 22 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 23-சுப்பையதேவர் காலனி –மழைநீர் வடிகால் அமைத்தல்-ரூ.22.60 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 23 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 6-விவேகானந்தா நகரில் மழை நீர் வடிகால் கட்டுதல் -ரூ.24.90 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 24 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 6-ராஜ கணபதி நகர் மற்றும் சூரியா நகரில் மழை நீர் வடிகால் கட்டுதல் -ரூ.24.90 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 25 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 23 - 50 அடி சாலையின் தெற்கு பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் -ரூ.16.25 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 26 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 11-சிங்காநல்லூர் பேருந்து நிலையம் -மறுதார்தளம் அமைத்தல் -ரூ.25 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 27 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 22-புலியகுளம் பிரதான சாலை மற்றும் ஜெகநாதன் சாலையில் மறுதார் தளம் அமைத்தல் -ரூ.19.20 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 28 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 15-அன்னை வேளாங்கன்னி நகர்- பூங்கா அமைத்தல் -ரூ.25 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 29 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 10-ஜிவி ரெஸிடென்ஸி-தார்தளம் அமைத்தல் -ரூ.24.75 இலட்சம் மதிப்பீடு நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 30 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 2-விளாங்குறிச்சி சாலை –ரயில்வே கேட் முதல் டெலிகாம் காலனி வரை மறுதார்தளம் அமைத்தல் -ரூ.25 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 31 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 72-எப்.சி.ஐ.சாலை மற்றும் குறுக்கு சாலைகளில் தார்தளம் அமைத்தல் - ரூ.25 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 32 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 66-தயிர்இட்டேரி தெற்கு பகுதி-ரயில்வே லைன் முதல் சங்கனூர் பிரதான சாலை வரை தார்தளம் அமைத்தல் -ரூ.25 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 33 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 72-பாரதி நகர் சாலை-சத்தி மருத்துவமனை முதல் போலீஸ் காலனி வரை உள்ள பிரதான சாலைகளில் தாள்தளம் அமைத்தல்- ரூ.25 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 34 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 3-தியாகி குமரன் வீதிகள்-கற்சாலைகள் அமைத்தல்- ரூ.18.50 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 35 | பொறியியல் பிரிவு -தமிழ்நாடு பொதுப்பணித்துறை மற்றும் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை -தரப்படுத்தப்பட்ட விலைவிபர அட்டவணை-மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்-சமர்பித்தல் தொடர்பாக |

| | |
|---|---|
| 36 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 67-வேலுச்சாமி வீதியில் மறுதார்தளம் அமைத்தல் பணி-ஒப்பந்தப்புள்ளி ஏற்றல்-மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 37 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 43-கெம்பட்டி காலனி மேல்நிலைப்பள்ளியில் கழிப்பிடம் கட்டுதல்- ஒப்பந்தப்புள்ளி ஏற்றல்-மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 38 | பொறியியல் பிரிவு -11 அபிவிருத்திப் பணிகள் செய்தல்-ஒப்பந்தப்புள்ளி ஏற்றல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 39 | பொறியியல் பிரிவு -தெற்கு மற்றும் மேற்கு மண்டலம் -வாகனங்களில் பொருத்தப்பட்ட கொசு மருந்து புகை அடிக்கும் இயந்திரங்கள் வாங்குதல்-ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் -தொடர்பாக |
| 40 | பொறியியல் பிரிவு -வடக்கு மற்றும் கிழக்கு மண்டலம் -வாகனங்களில் பொருத்தப்பட்ட கொசு மருந்து புகை அடிக்கும் இயந்திரங்கள் வாங்குதல்-ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் -தொடர்பாக |
| 41 | Jnnurm -மாநகராட்சி பிரதான அலுவலகம்- லிப்ட் வசதி அமைத்தல் -ரூ.25 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 42 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 27-அவிநாசி சாலை வணிகவளாக அலுவலகத்தின் மேற்கு பகுதிக்கு முன்புறம் முகப்பு அமைத்தல் பணி -.ரூ.21.50 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 43 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 27-அவிநாசி சாலை வணிகவளாக அலுவலகத்தின் வடக்கு பகுதிக்கு முன்புறம் முகப்பு அமைத்தல் பணி -.ரூ.21.50 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 44 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 58-எஸ்.எம்.மருதாசலம் வீதி உள்ளிட்டவை-கற்சாலை அமைத்தல் பணி-ரூ.16. இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 45 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 63-என்.எஸ்.ஆர். சாலையின் வடக்குப்புறம் -மழைநீர் வடிகால் அமைத்தல் பணி-ரூ.25 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 46 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 34-ஜவஹர் நகர் மற்றும் நெசவாளர் காலனி-மறுதார்தளம் அமைத்தல் .ரூ.17 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 47 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 50-வேளாண்மை பல்கலைக்கழகம் வளாகம்-மழைநீர் வடிகால் அமைத்தல்- .ரூ.23 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 48 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 34-மேட்டுப்பாளையம் சாலை மேற்குப்பகுதி -மழைநீர் வடிகால் அமைத்தல்- .ரூ.22 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 49 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 60-தவசி நகர் பொது ஒதுக்கீட்டு இடம்-பூங்கா அமைத்தல் -ரூ.25 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 50 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 48-பன்னீர்செல்வம் பூமார்க்கெட்டில் தரைதளம் மற்றும் முதல் தளத்தில் கடைகள் கட்டுதல் பணி-.ரூ.23.80 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 51 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 59-மருதமலை பிரதான சாலை-லிங்கனூர் பாலம் அருகில் உள்ள பள்ளத்திற்கு தடுப்புச்சுவர் கட்டுதல் பணி -ரூ.24 லட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 52 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 42-குறிஞ்சி கார்டன்ஸ் -மழைநீர் வடிகால் அமைத்தல் பணி- .ரூ.21.50 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 53 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 37-சி.எம்.சி. காலனி சமுதாய கூடத்தில் அறைகள் கட்டுதல் -ரூ.25 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 54 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 62-கே.கே.புதூர் பிரதான சாலையின் தென்புறம் -மழைநீர் வடிகால் அமைத்தல்-ரூ.16.50 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 55 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 36-தியாகராய புது வீதி1,3-தார்தளம் புதுப்பித்தல் பணி -.ரூ.18.50 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 56 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 36- தேவாங்கபேட்டை சாலை வணிக வளாகம் கட்டுதல் பணி -.ரூ.20 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 57 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 36-அண்ணா பூங்காவில் சுற்றுச்சுவர் மற்றும் அபிவிருத்திப்பணிகள் செய்தல்- .ரூ.25 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 58 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் -வார்டு எண் 32-டாடாபேட் வீதி எண் 7-கால்வாய் மூடுபலகை அமைத்தல் பணி -சட்டமன்ற உறுப்பினர் நிதி –ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் -மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| 59 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் -வார்டு எண் 30-100 அடி ரோடு முதல் வீதி – மேல்நிலைத்தொட்டி கட்டுதல் பணி -சட்டமன்ற உறுப்பினர் நிதி –ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் -மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 60 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - 5 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் -மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| 61 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - 9 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் -மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| 62 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 12 – நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி மயானம் - எரிவாயு மயானம் அமைத்தல் பணி – மதிப்பீடு ரூ. 91 லட்சம் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 63 | பொறியியல் பிரிவு - - டேங்க் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் -மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| 64 | பொறியியல் பிரிவு -நகர்ப்புற ஏழை மக்களுக்கான குடியிருப்புகள் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல் திட்டம் -உக்கடம் பகுதி மாநகராட்சி கழிவு நீர் பண்ணை – 12.0 ஏக்கர் நிலம் -நில உபயோக மாற்றம் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 65 | நகரமைப்புப் பிரிவு-வடக்கு மண்டலம் -டைடல் பார்க் -9.50 ஏக்கர் பரப்பளவுள்ள மனையிடம் - பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 66 | நகரமைப்புப் பிரிவு -கிழக்கு மண்டலம் - சௌரிபாளையம் கிராமம் - நகரளவு எண் 1818 முதலியன – பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 67 | மேற்கு மண்டலம் -மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 68 | பொறியியல் பிரிவு -பிரதான பகிர்மானக்குழாய்கள் அமைத்தல் பணி- ரூ. 25 இலட்சம் மதிப்பீடு –நிர்வாக அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 69 | பொறியியல் பிரிவு-வடக்கு மண்டலம் - வார்டு எண் 3 –தண்ணீர்பந்தல் பகுதி -சாலை புதுப்பித்தல் பணி -ரூ.22.25 லட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 70 | **Jnnurm** -மாநகராட்சி பிரதான அலுவலகம்- கூடுதல் அபிவிருத்திப் பணிகள் -ரூ.25 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 71 | பொறியியல் பிரிவு - தெருவிளக்குகள் பராமரிப்பு பணி –புதிய ஒப்பந்தப்புள்ளி ஏற்கும்வரை தற்போதுள்ள ஒப்பந்ததாரர்களே பராமரித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 72 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 9 –ரிலையன்ஸ் கார்டன்ஸ் முதலியன-பொது ஒதுக்கீட்டு இடம் - சுற்றுச்சுவர் மற்றும் பூங்கா அமைத்தல் பணி - ரூ.24 லட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 73 | பொறியியல் பிரிவு-கிழக்கு மண்டலம் - வார்டு எண் 4 –எஸ்.ஐ.எச்.எஸ் காலனி –மழைநீர் வடிகால் அமைத்தல் பணி ரூ..24.90 லட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 74 | பொறியியல் பிரிவு-வடக்கு மண்டல அலுவலகம் -2-வது தளம் கட்டுதல் பணி -ரூ.25 லட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **75** | பொறியியல் பிரிவு-வடக்கு மண்டலம் - வார்டு எண் 17 –வி.ஜி.ராவ் நகர் பகுதி – எ பிளாக் -வகுப்பறைகள் கட்டுதல் பணி -ரூ.25 லட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **76** | பொறியியல் பிரிவு-வடக்கு மண்டலம் - வார்டு எண் 17 –வி.ஜி.ராவ் நகர் பகுதி – பி பிளாக் -வகுப்பறைகள் கட்டுதல் பணி -ரூ.25 லட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **77** | பொறியியல் பிரிவு-தெற்கு மண்டலம் - வார்டு எண் 12 – நஞ்சுண்டாபுரம் கழிவுநீர் பண்ணை -150 எச்.பி. மோட்டார் அமைத்தல் பணி -ரூ.24.80 லட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **78** | தெற்கு மண்டலம்-வார்டு எண் 38-மழைநீர் வடிகால் கட்டுதல் பணி-ரூ.28 லட்சம் மதிப்பீடு - நிர்வாக அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **79** | வடக்கு மண்டலம்-ஆம்னி பேருந்து நிறுத்தக்கடைகள் ஒதுக்கீடு செய்தல் -ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **80** | நகரமைப்புப் பிரிவு - உள்ளாட்சி அமைப்புகள் -நிலை உயர்த்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **81** | நகரமைப்புப் பிரிவு -கிழக்கு மண்டலம் -15.71 ஏக்கர் நிலம் -நில உபயோக மாற்றம் செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **82** | தெற்கு மண்டலம் -காந்திபுரம் மற்றும் அவிநாசி ரோடு வணிக வளாக கடைகள் - ஏலத்தொகை ஏற்றல் –மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

நன்றியுரை

## திருக்குறள்

**இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்.**

(குறள் -712)

## விளக்கம்

**சொற்களின் வழிமுறையறிந்த நல்லறிவாளர்கள் அவையின் நேரத்தையும், நிலைமையையும் உணர்ந்து உரையாற்ற வேண்டும்.**

**திருவள்ளுவர்.**

---

## ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

---

சிறப்புத் தீர்மானம் நாள் 28.5.08

பொருள் - தொழில்நுட்ப உதவியாளர்களாக தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் 11 நபர்களுக்கு பணிவரன்முறைப்படுத்த உத்தரவு வழங்க தீர்மானம் நிறைவேற்றக் கோருதல்.

கோவை மாநகராட்சியில் பொறியியற் பிரிவு அலுவலகங்களில் 01.10.1996-க்குப் பிறகு நாளது தேதிவரை சுமார் 10 ஆண்டுகளாக தினக்கூலி அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளர்களாக கீழ்க்கண்ட நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

| வ.எண் | பெயர் | கல்வித்தகுதி |
|---|---|---|
| 1 | பி. ஜோதி விநாயகம் | B.E |
| 2 | வி.ஜெகதீஸ்வரி | D.C.E |
| 3 | சி.டி. சீனிவாசன் | D.C.E |
| 4 | எம். சக்திவேல் | D.E.E.E |
| 5 | கே. சரவணக்குமார் | D.C.E |
| 6 | கே. கணேசன் | D.C.R.E |
| 7 | ஆர். வெங்கடேஷ் | D.C.E |
| 8 | பி. அனிதா | D.C.E |
| 9 | ஜே. மார்ட்டின் மரிய அந்தோணி | D.C.E |
| 10 | ஜி. கமலக்கண்ணன் | B.E |
| 11 | எஸ். மோகன்குமார் | D.C.E |

1.10.1996-க்கு முன்பு தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வந்த 12 நபர்களுக்கு அரசு ஆணை எண் 21 நாள் 23.2.2006-ன்படி மாநகராட்சி பொறியியல் பிரிவில் இருந்த காலி பணியிடங்களான ஆர்.என்.எம்.ஆர். மற்றும் தேர்ச்சித்திறன் உதவியாளர் நிலை –II (Skilled Assistant Grade –II ) ஆகிய பணியிடங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மேற்படி 11 நபர்களும் தொடர்ந்து 10 ஆண்டுகளாக இம்மாநகராட்சியில் பணிபுரிந்து வருவதாலும், மாநகராட்சி பொறியியல் பிரிவு பணிகள் குறித்து அனுபவம் பெற்றிருப்பதாலும், 1.10.96-க்கு முன்பு தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து பணியமர்த்தப்பட்ட 12 நபர்களுக்கு வழங்கப்பட்ட அரசு ஆணையின் அடிப்படையில், 1.10.96-க்குப் பின்பு நாளது தேதிவரை பணிபுரிந்து வரும் மேற்படி 11 நபர்களையும் இம்மாநகராட்சியில் பொறியியல் பிரிவில் உள்ள காலிப் பணியிடங்களில், அவர்களின் கல்வித் தகுதிக்குகேற்ப பணிநியமனம் செய்ய அரசினைக் கோர தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென அனைத்து கட்சி மாமன்றக்குழு சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாமன்ற சிறப்புத் தீர்மானம் எண் 19 நாள் 28.5.08

பணி நியமனம் செய்ய அனுமதி வழங்குமாறு அரசினைக் கோரலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 1

28.4.2008 ம் தேதிய மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சங்கனூர் கிராமம், க.ச. எண். 145ஏ/ 1, உள்ளிட்ட புலங்களில் வசித்து வரும் பொதுமக்கள் வார்டு எண். 64 சேர்மன் ராஜ்நகர் பகுதிக்கு மேட்டுப்பாளையம் சாலையில் இருந்து கிழக்கு நோக்கி அணுகுசாலையாக பொதுமக்களால் உபயோகப்படுத்தப்பட்டு வந்த சாலை தற்சமயம் நீதிமன்ற உத்தரவுப்படி தனியார் இடம் என தீர்ப்பு பெறப்பட்டுள்ளதால் நில சொந்தக்காரர் வேலி போட்டு சாலையை அடைத்துள்ளார் எனவும் மீண்டும் சாலை அமைத்துத் தரும்படியும் கோரியுள்ளது – குறித்து.

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சங்கனூர் கிராமம் க.ச. எண். 145ஏ / 2 புலத்தில் 500 அடி நீளத்திற்கு தனியாருக்கு சொந்தமான சாலை பொதுமக்கள் உபயோகத்திற்கு அவசியமாக தேவைப்படுவதால் நில ஆர்ஜிதம் மூலம் நிலத்தை கையகப்படுத்தி சாலை அமைக்கவும், கையகப்படுத்தப்படும் நிலப்பரப்பிற்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் தொகையினை சம்பந்தப்பட்ட நில உரிமையாளருக்கு இழப்பீட்டு தொகையாக வழங்கவும் மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நகரமைப்புக்குழு தனது தீர்மான எண். 46, நாள். 26.2.2008 –ல் அணுகுசாலை அமைக்க கோரும் நிலத்தின் உரிமையை சரிபார்த்து அதில் அரசு நிலம் ஏதும் இருப்பின் அதுபோக மீதமுள்ள தனியார் நிலத்தை கையகப்படுத்தி 23 அடி அகல சாலை அமைக்கலாம் என பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளது.

அலுவலகக் குறிப்பு . அனுமதிக்கலாம் ந.க. எண். 20681 / 07 / எச்1 (மே).

**மா.ந.ம.தீர்மானம் எண் : 20 நாள் : 28.05.2008**

பொருள் ஒத்திவைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 2

28.4.2008 ம் தேதிய மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

பொருள்: கோவை மாநகராட்சி – வரி – சொத்துவரி – பொது சீராய்வு சம்பந்தமாக.

-------------------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 01-10-1998-ல் நடைபெற்ற சொத்துவரி பொதுச் சீராய்வுக்குப்பின் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறையான பொது சொத்து வரி சீராய்வு 01-10-2003-ல் நடைபெற வேண்டியது பற்றி அரசு முடிவெடுக்காததால் பொது சீராய்வு நடைபெறவில்லை. தற்போது 01-04-2008 முதல் நடத்தப்படவுள்ள பொது சொத்துவரி சீராய்வின்போது வரிசார்ந்த விதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட வழிகாட்டுதல் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டுமென மாநகராட்சி ஆணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்ட நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் நீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 12.11.2007ந் தேதிய அரசாணை (பல்வகை) எண்.150 மாமன்றத்தால் தீர்மான எண்.296 நாள் 27.03.2008 தேதி பதிவு செய்யப்பட்டது.

மேற்படி அரசானை மற்றும் நிர்வாக ஆணையரின் வழிகாட்டுதல்களில் சொத்துவரி உயர்வினால் உயர்த்தப்படும் வரிகள் கீழ்கண்ட வரம்பிற்கு நிர்ணயிக்கப்படுவதுடன், நிர்ணயிக்கப்பட்ட வரம்பு குறிப்பிட்ட அளவுக்குமேல் மிகையாகாமலும் எந்த விதத்திலும் திருத்திய வரி தற்போதைய வரியை விடக்குறைவாக இல்லாமலும் மேற்படி சீராய்வுப்பணி 01.04.2008 முதல் 30.06.2008-ல் முடிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

| வ.எண். | இனங்கள் | தற்போதைய வரியுடன் உயா்வு சதவீதம். |
|---|---|---|
| 1 | குடியிருப்புக் கட்டிடங்கள் (உரிமைதாரா் குடியிருப்பு அல்லது வாடகைக்கு) | 25 சதவீதம் |
| 2 | தொழிற்சாலை கட்டிடங்களுக்கு | 100 சதவீதம் |
| 3 | வா்த்தகக் கட்டிடங்களுக்கு | 150 சதவீதம் |
| 4 | அரசுக் கட்டிடங்களுக்கு | 50 சதவீதம் |
| 5 | தனியாா் கட்டிடங்களில் இயங்கும் மத்திய அரசு மாநில அரசு அலுவலகங்களுக்கு மேற்கண்ட வழிகாட்டுதல்கள்படி<br><br>1. தொழிற்சாலை கட்டிடங்களுக்கு<br><br>2. வா்த்தக கட்டிடங்களுக்கு | <br><br><br><br>100 சதவீதம்<br><br>150 சதவீதம் |
| 6 | முந்தைய சீராய்வுக் காலத்தில் வரி விதிப்பான கட்டிடங்களுக்கு<br><br>1. 01.10.2007 க்குப்பின் வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு<br><br>2. 01.04.2006 முதல் 31.03.2006 க்குள்ளான கட்டிடங்களுக்கு<br><br>3. 01.04.2005 முதல் 31.03.2006 க்குள் வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு<br><br>4. 01.04.2004 முதல் 31.03.2005 க்குள் வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு<br><br>5. 01.04.2003 முதல் 31.03.2004 க்குள் வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு | <br><br><br>சீராய்வு இல்லை<br><br>5 சதவீதம்<br><br>10 சதவீதம்<br><br>15 சதவீதம்<br><br>20 சதவீதம் |
| 7 | 1. விளம்பர போா்டுகள் (Hoardings)<br><br>2. தகவல் தொடா்பு கோபுரங்கள் (Communication Towers)<br><br>குறிப்பு - 7 –ல் உள்ள இனங்களுக்கு அரசின் வழிகாட்டுதல் பெற்றபின் வரி சீராய்வு செய்யலாம் | மாதிரி வரிவிதிப்பு அரசிடம் பெற்றபின் வரிவிதிப்பு செய்யலாம் |
| 8 | சிறப்பு இனங்கள்<br><br>நட்சத்திர விடுதிகள், தீம்பாா்க்,அடுக்குமாடி மையங்கள், வணிக வளாகங்கள், குளிரூட்டப்பட்ட திருமண மண்டபங்கள், சிறப்புமிகு பிரத்யேக மருத்துவமனைகள் (Super Special Hospital)<br><br>குறிப்பு - 8 ல் கண்டுள்ள சிறப்பு இனங்களுக்கு அரச மாவட்ட முதன்மை கண்காணிப்புப் பொறியாளா் அவா்களின் வழிகாட்டுதலைப் பெற்று மாதாந்திர வாடகை மதிப்பு நிா்ணயம் செய்து வரி விதிப்பு செய்யலாம் | <br><br>1.4.2008 லிருந்து தனியாக அடிப்படை மதிப்பு நிா்ணயித்து வரிவிதிப்பு செய்யலாம் |

01-04-2008 லிருந்து சொத்துவரி விதிப்பு செய்யப்படும் கட்டிடங்களுக்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்புடன் இனம் வாரியாக அரசு நிர்ணயம் செய்துள்ள உயர்வு சதவீதத்தை கூடுதலாக்கி கீழ்க்கண்டவாறு வரிவிதிப்பு செய்யலாம்.

| வ.எண். | இனம் | 01.10.1998-ல் சதுரடிக்கு அடிப்படை மதிப்பு ரூ. | 01-04-2008ல் சீராய்வின்படி உயர்வுக்கு சதுரடிக்கு அடிப்படை மதிப்பு ரூ. |
|---|---|---|---|
| 1 | குடியிருப்புக் கட்டிடங்கள் (உரிமைதாரர் குடியிருப்பு அல்லது வாடகைக்கு) | 3.00 | 3.75 |
| 2 | தொழிற்சாலை கட்டிடங்களுக்கு (இரு மடங்கு) | 5.00 | 10.00 |
| 3 | வர்த்தக கட்டிடங்களுக்கு (மூன்று மடங்கு) | | |
| | மருத்துவ மனைகள், கல்யாண மண்டபங்கள் மற்றும் கடைகள் | 6.50 | 19.50 |
| | அலுவலகம் | 7.50 | 22.50 |
| | திரையரங்குகள், உணவு விடுதிகள் தங்கும் விடுதிகள் | 7.80 | 23.40 |
| | நட்சத்திர ஹோட்டல் தங்கும் விடுதி | 11.20 | 33.60 |

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.14 நாள் 22.04.08ன்படி மேற்காணும் பொருள் குறித்து மன்றத்தில் முடிவு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது. மாமன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - மாமன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண்.2627/08/MC1

## மா.ந.ம.தீர்மானம் எண் : 21 நாள் : 28.05.2008

குடியிருப்புக் கட்டிடங்களுக்கு (உரிமைதாரர் குடியிருப்பு அல்லது வாடகைக்கு) 20 சதவீதம், தொழிற்சாலை கட்டிடங்களுக்கு 50 சதவீதம், வர்த்தகக் கட்டிடங்களுக்கு 75 சதவீதம்,அரசு கட்டிடங்களுக்கு 50 சதவீதம் சொத்துவரி உயர்வு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

1.10.07-க்குப்பின் வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு வரிசீராய்வு இல்லை எனவும், 1.4.06 முதல் 30.9.07 வரை வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு 5 சதவீதம் சொத்துவரி உயர்வும், 1.4.03 முதல் 31.3.06 வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு 10 சதவீதம் சொத்துவரி உயர்வும் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

1.4.08 முதல் சீராய்வின்படி சொத்துவரி விதிப்பு செய்ய அடிப்படை மதிப்பு சதுர அடிக்கு

1. குடியிருப்புக் கட்டிடங்கள்
   (உரிமைதாரர் குடியிருப்பு அல்லது வாடகைக்கு) ரூ. 3.50/- எனவும்

2. தொழிற்சாலை கட்டிடங்களுக்கு ரூ. 7.50/- எனவும்

3. வர்த்தக கட்டிடங்களுக்கு

   அ) மருத்துவமனைகள், கல்யாண மண்டபங்கள், கடைகளுக்கு ரூ. 10.00/- எனவும்

   ஆ) அலுவலகங்களுக்கு ரூ. 15.00/- எனவும்

   இ ) திரையரங்குகள், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகளுக்கு ரூ. 15.00/- எனவும்

   ஈ) நட்சத்திர ஹோட்டல் தங்கும் விடுதிகளுக்கு ரூ. 33.60/- எனவும்

நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது. 1.4.2008 முதல் வரிஉயர்வு நிர்ணயம் செய்து வசூலிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 3

கோவை மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள ஊனமுற்ற குழந்தைகள் நல சங்கத்தின் நிர்வாகிகள் மேற்படி சங்கத்திற்கு 2007-08 ம் ஆண்டிற்கான நன்கொடை ரூ. 5000/- ( ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்குமாறு கேட்டுள்ளனர்.

அரசு ஆணை எண். 1066, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 10.12.1990-ல் மேற்படி சங்கத்தின் நன்கொடை கோரும் கடிதத்தின் பேரில் உரிய மன்ற அனுமதி பெற்று நன்கொடை வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே உடல் ஊனமுற்ற குழந்தைகள் நல சங்கத்திற்கு 2007-2008 ம் ஆண்டிற்கான நன்கொடை தொகை ரூ. 5000/- ( ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) மாநகராட்சி நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 4610/ 2008/MC 9

மா.ந.ம.தீர்மானம் எண் : 22 நாள் : 28.05.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் : 4

கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமான பில்லூர் II திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அரசு ஆணை எண் (டி) 160 ந.நி.ம.கு.வ.துறை 17.04.2007 மற்றும் அரசு ஆணை எண் (டி) 551 ந.நி.ம.கு.வ.துறை 13.11.07 ல் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, திட்டப்பணி ஆறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு, அதில் பகுதி II பணியான "பெரிய கோம்பை மலை குகை வெளியேற்றத்திலிருந்து வெள்ளியங்காடு சுத்திகரிப்பு நிலையம் வரை 1500 எம். எம். விட்டம் உள்ள பி.எஸ்.சி (PSC) மற்றும் எம்.எஸ். (MS) பைப்ஸ் மெயின் குழாய் 1.05 கி.மீ நீளத்திற்கு அமைக்கும் குழாய் பதிக்கும் பணி"யின் மதிப்பீடு ரூ. 167 இலட்சத்திற்கு கடந்த 6.2.08 ல் மூன்றாம் முறையாக ஒப்பந்தவிலைப்புள்ளி கோரப்பட்டது.

மேற்படி மூன்றாம் அழைப்பில் வரப்பட்ட தகுதி பெற்ற ஒரு ஒப்பந்த விலைப்புள்ளியான மெஸ்ஸர்ஸ் இந்தியன் ஹுயூம் பைப் கம்பெனி லிட், மும்பை என்ற நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி, நிறுவனத்தின் விலைக்குறைப்பிற்குப் பின்னர் வழங்கிய தொகையான ரூ 2,93,29,520.71/– மதிப்பீட்டுத் தொகைக்கு 85.30% சதவீதம் கூடுதலாக இருந்ததால், மாமன்றம் தமது தீர்மான எண் 271 நாள் 27.03.08 ல் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளியினை "ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின்" முடிவிற்கு அனுப்பவும், குழுவின் பரிந்துரையை ஏற்கவும் தீர்மானிக்கப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு, மெஸ்ஸர்ஸ் இந்தியன் ஹுயூம் பைப் கம்பெனி லிட், மும்பை நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளியினை ஆய்வு செய்து, நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளி மதிப்பீட்டுத் தொகையை விட (85.30%) கூடுதலாக உள்ளதால், மறு ஒப்பந்தப்புள்ளி கோர பரிந்துரை செய்துள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

இந்நிலையில் 01.04.08 முதல் பொது பணித் துறை/தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகிய துறை (2008/09) ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலைப்பட்டியல் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதால், அதன் பேரில் மேற்படி பணிக்கான திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டதில் ரூ.195.00 இலட்சம் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளதால், திருத்திய மதிப்பீடு ரூ. 195.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: (அ) ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிந்துரையினை மாமன்றம் பதிவு செய்யலாம்.

(ஆ) 2008/09 ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலைவிபரப் பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு தொகையான ரூ. 195.00 இலட்சத்தில் இப்பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெற்று, மறு ஒப்பந்த விலைப்புள்ளி கோர மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(இ) அரசின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகைக்கும் கூடுதலாகும் செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 4611 / 08 / JN2

மா.ந.ம.தீர்மானம் எண் : 23 நாள் : 28.05.2008

1. ஒப்பந்தப்புள்ளி உறுதிசெய்யும் குழுவின் பரிந்துரையை ஏற்று மறுஒப்பந்தப்புள்ளி கோரவும், கோரப்படும் மறு ஒப்பந்தப்புள்ளியினை தேசிய அளவில் கோரவும் தீர்மானிக்கப்பட்டது.

2. 2008-09 ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலைவிபரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ. 195.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

3. அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகைக்கும் கூடுதலாக உண்டாகும் செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 5

கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமான பில்லூர் II திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அரசு ஆணை எண் (டி) 160 ந.நி.ம.கு.வ.துறை 17.04.2007 மற்றும் அரசு ஆணை எண் (டி) 551 ந.நி.ம.கு.வ.துறை 13.11.2007 ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, திட்டப்பணி ஆறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு, அதில் பகுதி–IV பணியான "வெள்ளியங்காடு நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கட்டன் மலை குகை நுழைவு வரை 1100 எம்.எம் எம்.எஸ். (MS) குழாய் அமைத்தல் பணி"யின் மதிப்பீடு ரூ. 1993.00 இலட்சத்திற்கு கடந்த 15.11.07ல் முதல் முறையாக ஒப்பந்தவிலைப்புள்ளி கோரப்பட்டது.

மேற்படி முதல் அழைப்பில் வரப்பட்ட தகுதி பெற்ற நான்கு நிறுவனங்களில் குறைந்த ஒப்பந்தவிலைப்புள்ளி வழங்கிய மெஸ்ஸர்ஸ் சுபாஷ் பிராஜெட் & மார்க்கெட்டிங் லிட், பெங்களூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி தொகையான ரூ 25,03,12,404/– மதிப்பீட்டுத் தொகைக்கு 27.51% சதவீதம் கூடுதலாக இருந்ததால் மாமன்றம் தமது தீர்மான எண் 268 நாள் 27.03.08 ல் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை "ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவிற்கு" அனுப்பவும் குழுவின் பரிந்துரையை ஏற்கவும் தீர்மானிக்கப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு, மெஸ்ஸர்ஸ் சுபாஷ் பிராஜெட் & மார்க்கெட்டிங் லிட், பெங்களூர் நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளி மதிப்பீட்டு தொகையை விட (27.51%) கூடுதலாக இருந்தாலும், மேற்படி நிறுவனம் மார்க்கெட் விலையில் கட்டுமான பொருட்களுக்கு ஏற்ப கூடுதல் விலை வழங்க வேண்டும் என்ற நிபந்தனை தெரிவித்து கடிதம் ஒப்பந்தவிலைப்புள்ளியுடன் இணைந்து இருந்ததால் இவ்வொப்பந்த விலைப்புள்ளியினை நிபந்தனையுடன் கூடிய விலைப் புள்ளியாக கருதி நிராகரித்து மறு ஒப்பந்தப்புள்ளி கோர பரிந்துரை செய்துள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

இந்நிலையில் 01.04.08 முதல் பொது பணித் துறை/தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகிய துறை (2008/09) ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலைப்பட்டியல் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதால், அதன் பேரில் மேற்படி பணிக்கான திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டதில், ரூ. 2378.00 இலட்சத்திற்க்கு செலவாகும் என்பதால், திருத்திய மதிப்பீடு ரூ. 2378.00 இலட்சத்திற்க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: (அ) ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிந்துரையினை ஏற்று மெஸ்ஸர்ஸ் சுபாஷ் பிராஜெட் & மார்க்கெட்டிங் லிட், பெங்களுர் அவர்களின் ஒப்பந்தவிலைப்புள்ளியினை நிராகரித்து மாமன்றம் பதிவு செய்யலாம்.

(ஆ) 2008/09 ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலைப் பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.2378.00 இலட்சத்தில், இப் பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெற்று, மறு ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(இ) அரசின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகைக்கும் கூடுதலாகும் செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 4613 / 08 / JN2

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 24 நாள் : 28.05.2008</u>

1. ஒப்பந்தப்புள்ளி உறுதிசெய்யும் குழுவின் பரிந்துரையை ஏற்று மறுஒப்பந்தப்புள்ளி கோரவும், கோரப்படும் மறு ஒப்பந்தப்புள்ளியினை தேசிய அளவில் கோரவும் தீர்மானிக்கப்பட்டது.

2. 2008-09 ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலைவிபரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ. 2,378.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

3. அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகைக்கும் கூடுதலாக உண்டாகும் செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 6

கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமான பில்லூர் II திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அரசு ஆணை எண் (டி) 160 ந.நி.ம.கு.வ.துறை 17.04.2007 மற்றும் அரசு ஆணை எண் (டி) 551 ந.நி.ம.கு.வ.துறை 13.11.2007 ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, திட்டப்பணி ஆறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு, அதில் பகுதி–VI பணியான "ராமகிருஷ்ணாபுரத்தில் 30 இலட்சம் கொள்ளளவு கொண்ட பிரதான மேல்நிலை தொட்டி (MSR) கட்டும் பணி"யின் மதிப்பீடு ரூ. 304.60 லட்சத்திற்கு கடந்த 15.11.07 ல் முதல்முறையாக ஒப்பந்தவிலைப்புள்ளி கோரப்பட்டது.

மேற்படி முதல் அழைப்பில் வரப்பட்ட தகுதி பெற்ற ஒரு ஒப்பந்தவிலைப்புள்ளியான மெஸ்ஸர்ஸ் ஜோதி இஞ்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி, நிறுவனத்தின் விலைக்குறைப்புக்கு பின்னரும் வழங்கிய தொகையான ரூ 4,90,71,551.80/– மதிப்பீட்டுத் தொகைக்கு 68.04% சதவீதம் கூடுதலாக இருந்ததால், மாமன்றம் தமது தீர்மான எண் 270 நாள் 27.03.08 ல் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை "ஒப்பந்தவிலைப்புள்ளி உறுதி செய்யும் குழுவின்" முடிவிற்கு அனுப்பவும், குழுவின் பரிந்துறையை ஏற்கவும் தீர்மானிக்கப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு, மெஸ்ஸர்ஸ் ஜோதி இஞ்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளியினை ஆய்வுசெய்து, நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளி மதிப்பீட்டு தொகையை விட (68.04%) கூடுதலாக உள்ளதால், மறு ஒப்பந்தப்புள்ளி கோர பரிந்துரை செய்துள்ளது . மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

இந்நிலையில் 01.04.08 முதல் பொது பணித் துறை/தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகிய துறை (2008/09) ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலைப்பட்டியல் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதால், அதன் பேரில் மேற்படி பணிக்கான திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டதில் ரூ. 380.00 இலட்சம் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளதால், திருத்திய மதிப்பீடு ரூ. 380.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: (அ) ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிந்துரையினை மாமன்றம் பதிவு செய்யலாம்.

(ஆ) 2008/09 ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலைவிபரப் பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு தொகையான ரூ.380.00 இலட்சத்தில் இப் பணிக்கு தொழில் நுட்ப அனுமதி பெற்று, மறு ஒப்பந்தவிலைப்புள்ளி கோர மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(இ) அரசின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகைக்கும் கூடுதலாக ஆகும் செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 4615 / 08 / JN2

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 25 நாள் : 28.05.2008</u>

1. ஒப்பந்தப்புள்ளி உறுதிசெய்யும் குழுவின் பரிந்துரையை ஏற்று மறுஒப்பந்தப்புள்ளி கோரவும், கோரப்படும் மறு ஒப்பந்தப்புள்ளியினை தேசிய அளவில் கோரவும் தீர்மானிக்கப்பட்டது.

2. 2008-09 ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலைவிபரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ. 380. 00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

3. அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகைக்கும் கூடுதலாக உண்டாகும் செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் : 7

கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமான பில்லூர் II திட்டம், ஜவகர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அரசு ஆணை எண் (டி) 160 ந.நி.ம.கு.வ.துறை 17.04.07 மற்றும் அரசு ஆணை எண் (டி) 551 ந.நி.ம.கு.வ.துறை 13.11.07 படி ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள ஆறு பணிகளாக பிரிக்கப்பட்டு அதில் பகுதி III பணியான ''வெள்ளியங்காட்டில் 125 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி''யின் மதிப்பீடு ரூ. 2860 இலட்சத்திற்கு கடந்த 15.11.07 ல் முதல் அழைப்பில் ஒப்பந்த விலைப்புள்ளி கோரப்பட்டது.

மேற்படி முதல் அழைப்பில் தகுதிபெற்ற நான்கு நிறுவனங்களில், குறைந்த ஒப்பந்த விலைப்புள்ளி வழங்கிய மெஸ்ஸர்ஸ் கிர்லோஸ்கர் பிரதர்ஸ் லிட், பூனே என்ற நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி தொகையான ரூ 33,13,56,000/– மதிப்பீட்டுத் தொகைக்கு, 15.86% சதவீதம் கூடுதலாக இருந்ததால், மாமன்றம் தமது தீர்மான எண் 267 நாள் 27.03.08 ல் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ''ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின்'' முடிவிற்கு அனுப்பவும், குழுவின்'' பரிந்துரையை ஏற்கவும் தீர்மானிக்கப்பட்டது.

ஒப்பந்தம் உறுதி செய்யும் குழு, மெஸ்ஸர்ஸ் கிர்லோஸ்கர் பிரதர்ஸ் லிட், பூனே நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளியினை ஆய்வு செய்து, இக்குறைந்த ஒப்பந்தவிலைப்புள்ளி மதிப்பீட்டுத் தொகைக்கு, 15.86% சதவீதம் கூடுதலாக இருந்தாலும் நடப்பாண்டு (2008–09) தரப்படுத்தப்பட்ட விலைவிபர பட்டியலுக்கு கணக்கிடப்பட்டதில் 4.88% சதவீதம் குறைவானதாக தெரிவிக்கப்பட்ட கருத்தினை ஏற்று மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளியினை ஏற்கலாம் என 11.04.08 ல் பரிந்துரை செய்துள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: (அ) மாமன்றம் ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிந்துரையினை ஏற்று மெஸ்ஸர்ஸ். கிர்லோஸ்கர் பிரதர்ஸ் லிட் , பூனே. நிறுவனத்தின் 15.86% சதவீதம் மதிப்பீட்டிற்கு கூடுதலாக வரப்பட்ட ஒப்பந்தவிலைப்புள்ளியினை ஒப்புக்கொள்ள பதிவு செய்யலாம்.

ந.க.எண் 4612 / 08 / JN2

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 26 நாள் : 28.05.2008</u>

தி/ள். கிர்லோஸ்கர் பிரதர்ஸ் லிட், பூனே நிறுவனத்தின் 15.96 சதவீதம் மதிப்பீட்டிற்கும் கூடுதலான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க ஒப்பந்தப்புள்ளி உறுதிசெய்யும் குழு பரிந்துரைத்துள்ளதை மாமன்றம் ஏற்று பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 8

கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமான பில்லூர் II திட்டம், ஜவகர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அரசு ஆணை எண் (டி) 160 ந.நி.ம.கு.வ.துறை 17.04.07 மற்றும் அரசு ஆணை எண் (டி) 551 ந.நி.ம.கு.வ.துறை 13.11.07 படி ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள ஆறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு அதில் பகுதி V பணியான ''கட்டன் மலை குகை வெளியேற்றத்திலிருந்து ராமகிருஷ்ணாபுரம் மேல்நிலைத் தொட்டி வரை 1100 முதல் 1500 எம்.எம் வரை எம்.எஸ். (MS) குழாய் அமைத்தல் பணி''யின் மதிப்பீடு ரூ. 4587.50 இலட்சத்திற்கு கடந்த 15.11.07 முதல் அழைப்பில் ஒப்பந்த விலைப்புள்ளி கோரப்பட்டது.

மேற்படி முதல் அழைப்பில் தகுதிப்பெற்ற ஆறு நிறுவனங்களில் குறைந்த ஒப்பந்த விலைப்புள்ளி வழங்கிய மெஸ்ஸர்ஸ் சுபாஷ் பிராஜெட் & மார்க்கெட்டிங் லிட், பெங்களூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி தொகையான ரூ 55,77,34,821/– மதிப்பீட்டுத் தொகைக்கு 14.41% சதவீதம் கூடுதலாக இருந்ததால், மாமன்றம் தமது தீர்மான எண் 269 நாள் 27.03.08 ல் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ''ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு''வின் முடிவிற்கு அனுப்பவும், குழுவின் பரிந்துரையினை ஏற்கவும் தீர்மானிக்கப்பட்டது.

ஒப்பந்தம் உறுதி செய்யும் குழு, மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளி ஆய்வு செய்து, இக்குறைந்த ஒப்பந்தவிலைப்புள்ளி மதிப்பீட்டுத் தொகைக்கு 14.41% சதவீதம் கூடுதலாக இருந்தாலும் நடப்பாண்டு (2008–09) தரப்படுத்தப்பட்ட விலைவிபர பட்டியலுக்கு கணக்கிடப்பட்டதில் 6.46% சதவீதம் குறைவானதாக தெரிவிக்கப்பட்ட கருத்தினை ஏற்று மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளியினை ஏற்கலாம் என 11.04.08 ல் பரிந்துரை செய்துள்ளது. மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்க பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: (அ) மாமன்றம் ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிந்துரையினை ஏற்று மெஸ்ஸர்ஸ் சுபாஷ் பிராஜெட் & மார்க்கெட்டிங் லிட், பெங்களூர் நிறுவனத்தின் 14.41% சதவீதம் மதிப்பீட்டிற்கும் கூடுதலாக வரப்பட்ட ஒப்பந்தவிலைப்புள்ளியினை ஒப்புக்கொள்ள பதிவு செய்யலாம்.

ந.க.எண் 4614 / 08 / JN2

மா.ந.ம.தீர்மானம் எண் : 27 நாள் : 28.05.2008

தி/ள். சுபாஷ் ப்ராஜெக்ட் & மார்க்கெட்டிங் லிட், பெங்களூர் நிறுவனத்தின் 14.41 சதவீதம் மதிப்பீட்டிற்கும் கூடுதலான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க ஒப்பந்தப்புள்ளி உறுதிசெய்யும் குழு பரிந்துரைத்துள்ளதை மாமன்றம் ஏற்று பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 9

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 12 நஞ்சுண்டாபுரம் சாலையின் கிழுபுறம் எஸ்.என்.வி. கார்டன்ஸ் முதல் பார்சன் அபார்ட்மெண்ட் முன்புறம் உள்ள பெட்ரோல் பங்க் வரை மழைநீா வடிகால் திருப்பிக்கட்ட ரூ. 25,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதற்கு தொ.நு.அ.எண் 100/08-09 P.No. 73 தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டள்ளது.

2007 ஆம் ஆண்டு வெள்ள நிவாரண நிதியின்கீழ் இப்பணிக்கு நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளதாக நகராட்சி நிர்வாக ஆணையாளர் தனது கடித எண் 60241/07/E2 நாள் 17.3.08-ல் தெரியப்படுத்தியுள்ளார்.

மேற்கண்ட பணிக்கு நிர்வாக ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 3137/08/ எம்டி 4

மா.ந.ம.தீர்மானம் எண் : 28 நாள் : 28.05.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 10

பொருள் -கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் - சாஸ்திரி மைதானத்தில் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு 6.5.08 முதல் 8.5.08 மற்றும் 11.5.08 ஆகிய தேதிகளில் கிரிக்கெட் போட்டிகள் நடத்த அனுமதிக்கப்பட்டது-பின்னேற்பு வழங்குதல் -தொடர்பாக.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட சாஸ்திரி மைதானத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 6.5.08 முதல் 8.5.08 மற்றும் 11.5.08 ஆகிய தேதிகளில் கிரிக்கெட் போட்டிகள் நடத்த திரு சி. எம். சாமி, விழாக்குழு செயலாளர், ஏனாதி, முதுகுளத்தூர் தாலுக்கா, இராமநாதபுரம் மாவட்டம் என்பவரது 24.4.08 -ம் தேதிய விண்ணப்பத்தில் அனுமதி கோரியதை தொடர்ந்து அவசர அவசியத்தை முன்னிட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தினசரி வாடகை ரூ.1000/- வீதம் ரூ.4000 /- மற்றும் வைப்புத் தொகை ரூ.20,000/- செலுத்தியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

எனவே சாஸ்திரி மைதானத்தில் 6.5.08 முதல் 8.5.08 மற்றும் 11.5.08 ஆகிய தேதிகளில் கிரிக்கெட் போட்டிகள் நடத்த அனுமதி வழங்கப்பட்டமைக்கு பின்னேற்பு வழங்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண் 3931 /2008/ டி 1 (மே)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 29 நாள் : 28.05.2008**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 11

கோயம்புத்தூர் மாநகர், ரேஸ்கோர்ஸ் பகுதியில் பந்தையச்சாலையின் இருபுறங்களிலும் 200மீ தூரத்திற்குள் வணிக உபயோக மற்றும் அடுக்குமாடிக் கட்டிடங்கள் கட்டுவதை தடை செய்ய உத்தேசித்து மாமன்றத்தீர்மான எண். 146 நாள். 25.9.2007 -இல் ஒப்புதல் பெற்று கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம், 1981, பிரிவு 269 -இன் கீழ் தயார் செய்த வரைவு ஒழுங்கு முறை விதிகளை 28.11.2007 -ஆம் நாளைய தினத்தந்தி மற்றும் இந்து ஆகிய நாளிதழ்களிலும் 26.12.07 ஆம் நாளைய அரசிதழிலும் பொதுமக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை கோரி பிரசுரிக்கப்பட்டது. அவகாசம் வழங்கிய 24.3.2008 உடன் முடிந்த 90 நாட்களில் 618 மனுக்கள் தடை உத்தரவிற்கு ஆதரவாகவும் 467 மனுக்கள் எதிர்ப்பு தெரிவித்தும் ஆக மொத்தம் 1085 மனுக்கள் வரப்பெற்றுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

தடைஉத்தரவை ஆதரிப்போர் வணிக வளாகம் மற்றும் அடுக்குமாடி கட்டிடங்களை அனுமதித்தால் மேற்படி பகுதி முழுவதும் வியாபார ஸ்தலமாகி போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்பதால் தடை உத்தரவை ஆதரித்துள்ளனர். வணிக மற்றும் பல அடுக்கு மாடிக் கட்டிடங்களை கட்ட அனுமதித்தால் தான் நகர் வளர்ச்சியடையும் எனவும் பொருளாதாரம் மேம்படும் எனவும் நகரை அழகூட்ட முடியும் என்பதால் உத்தரவை எதிர்க்கின்றனர்.

இந்த ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகளை மாமன்றம் நன்கு பரிசீலித்து, மாமன்றத்தால் ஏற்கெனவே தீர்மான எண். 146 நாள். 25.9.2007 –ல் ஒப்புதல் வழங்கியதற்கு அதிக அளவில் மாற்றங்கள் செய்யாமல் இந்த உத்தேச ஒழுங்குமுறை விதிகளை மேற்படி சட்டம் பிரிவு 269 (3) -ன்கீழ் உறுதி செய்யலாம். அவ்வாறு உறுதி செய்து மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றியவுடன் கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டப்பிரிவு 269 (4) -இன் கீழ் மறுபடியும் பிரசுரம் செய்து, அவ்வாறு பிரசுரம் ஆன தேதியிலிருந்து இந்த ஒழுங்குமுறை விதிகளை நடைமுறைபடுத்த வேண்டும். அவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து இந்த ஒழுங்குமுறை விதிகளுக்கு புறம்பாக யாரும் கட்டிடம் கட்டக்கூடாது. மேற்கண்ட விதிமுறைகளை பின்பற்றி, கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 269 (1) -ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட இந்த ஒழுங்குமுறை விதிகளை நடைமுறைப்படுத்தலாம்.

அலுவலக குறிப்பு -அங்கீகரிக்கலாம் ந.க.எண் 16221 / 07 / MH5

**மா.ந.ம.தீர்மானம் எண் : 30 நாள் : 28.05.2008**

அலுவலகக் குறிப்பு :- மேற்படி பணி சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீட்டிலிருந்து குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் , மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்

ந.க.எண் 14449/07/எம்.டி.3

மா.ந.ம.தீர்மானம் எண் : 78 நாள் : 28.05.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 60

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 06-05-2008 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூபாய் இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 15446/07/ MD2 | வார்டு எண் 7, ஆயுர்வேத மருத்துவமனை கட்டிடம் சிங்காநல்லூர் கிழக்கு மண்டலம் அலுவலகம் அருகில் திரும்ப கட்டுதல். | 12.00 | 25-04-2008 முதல் அழைப்பு | திரு.R.நடராஜன் | 4.76 கூடுதல் |
| 2. | 16065/07/ MD2 | வார்டு எண் 10, மசக்காளி பாளையம் ராதிகா மில் அருகில் கூடுதலாக குழந்தைகள் கழிப்பிடம் கட்டுதல் | 3.00 | 30.04-2008 இரண்டாம் அழைப்பு | திருமதி. வி.பாக்கியம் | 4.71 அதிகம் |
| 3 | 15088/07/ MD2 | வார்டு எண் 8, கிருஷ்ணாபுரம் ஆரம்பப்பள்ளியில் மதிய உணவுக் கூடம் கட்டுதல் | 2.25 | 30.04.2008 மூன்றாம் அழைப்பு | திருமதி. கே.பங்கஜம் | 4.97 அதிகம் |
| 4. | 5429/07/ MD2 | வார்டு எண் 33, பைபாஸ் சாலையில் ஆர் சி சி சிறு பாலம் கட்டுதல் | 2.60 | 30-04-2008 மூன்றாம் அழைப்பு | திரு.ஆர். செல்வராஜ் | 4.96 அதிகம் |
| 5. | 3486/08/ MD2 | வார்டு எண்.4 மகாத்மா காந்தி சாலையில் சரளை கற்களால ஆன சாலை அமைத்தல் | 25.00 | 30.04.2008 முதல் அழைப்பு | தி/வா. எம்.எஸ். இன்ஜினியர்ஸ் | 20.67 குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு வரிசை எண்.5 ல் உள்ள பணிகளின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண்.1 முதல் 4 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும், அனுமதிக்கலாம்.

ந.க.எண். 15446 /07/MD2

மா.ந.ம.தீர்மானம் எண் : 79 நாள் : 28.05.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 61

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 24-04-2008 மற்றும் 06-05-2008 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூபாய் இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 19744/07/ MD4 | வார்டு எண் 40, உக்கடம் பேருந்து நிலையத்தை நவீனப்படுத்தி பராமரிப்பு பணிகள் செய்தல் | 25.00 | 13-03-2008 முதல் அழைப்பு | தி/ள் கே.சி.பி. இன்ஜினியர்ஸ் அண்ட் பேப்ரிகேட்டர்ஸ் | 1.92 குறைவு |
| 2. | 14515/07/ MD4 | வார்டு எண் 41, எல்.ஜி. தோட்டத்தில் சமூதாயக்கூடம் கட்டுதல் | 23.00 | 13-03-2008 இரண்டாம் அழைப்பு | தி/ள் கே.சி.பி. இன்ஜினியர்ஸ் அண்ட் பேப்ரிகேட்டர்ஸ | 0.36 குறைவு |
| 3 | 19111/07/ MD4 | வார்டு எண் 48, வெட்டர்பென் பேட்டை மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு உணவு அருந்தும் அறை கட்டுதல் | 7.30 | 25-04-2008 இரண்டாம் அழைப்பு | திரு.கே. கோவிந்தராஜ் | 4.73 அதிகம் |
| 4. | 21019/07/ MD4 | வார்டு எண் 28 ஒசூர் ரோட்டில் உள்ள தெற்கு மண்டல அலுவலகத்தில் முதல் தளம் “சி பிளாக்” கட்டுதல் | 25.00 | 13-03-2008 முதல் அழைப்பு | தி/ள் விஸ்வநாதன் கன்ஸ்டர-க்சன்ஸ் | 4.57 அதிகம் |
| 5. | 20802/07/ MD4 | வார்டு எண் 25 ஒசூர் ரோட்டில் உள்ள தெற்கு மண்டல அலுவலககட்டிடத்தில் ‘சிபிளாக்” தரைதளத்தில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 15.00 | 13-03-2008 முதல் அழைப்பு | தி/ள் விஸ்வநாதன் கன்ஸ்டர-க்சன்ஸ் | 4.82 அதிகம் |
| 6. | 20801/07/ MD4 | வார்டு எண் 25 ஒசூர் ரோட்டில் உள்ள தெற்கு மண்டல அலுவலககட்டிடத்தில் ‘பிபிளாக்” தரைதளத்தில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 15.00 | 13-03-2008 முதல் அழைப்பு | தி/ள் விஸ்வநாதன் கன்ஸ்டர-க்சன்ஸ் | 4.60 அதிகம் |
| 7 | 21021/07/ MD4 | வார்டு எண் 25 ஒசூர் ரோட்டில் உள்ள தெற்கு மண்டல அலுவலககட்டிடத்தில் ‘ஏ-பிளாக்” முதல் தளம் கட்டுதல் | 25.00 | 13-03-2008 முதல் அழைப்பு | தி/ள் விஸ்வநாதன் கன்ஸ்டர-க்சன்ஸ் | 4.79 அதிகம் |
| 8. | 20800/07/ MD4 | வார்டு எண் 25 ஒசூர் ரோட்டில் உள்ள தெற்கு மண்டல அலுவலககட்டிடத்தில் ‘ஏபிளாக்” தரைதளத்தில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 15.00 | 13-03-2008 முதல் அழைப்பு | தி/ள் விஸ்வநாதன் கன்ஸ்டர-க்சன்ஸ் | 3.24 அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | 21020/07/ MD4 | வார்டு எண் 25 ஒசூர் ரோட்டில் உள்ள தெற்கு மண்டல அலுவலககட்டிடத்தில் 'பி-பிளாக்'' முதல் தளம் கட்டுதல் | 25.00 | 13-03-2008 முதல் அழைப்பு | தி/ள் விஸ்வநாதன் கன்ஸ்டர-க்சன்ஸ் | 4.55 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : வரிசை எண்.1 முதல் 2 வரை உள்ள பணிகளின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண்.3 முதல் 9 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும், அனுமதிக்கலாம்.

ந.க.எண். 19744/07/MD4

மா.ந.ம.தீர்மானம் எண் : 80 நாள் : 28.05.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 62

கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.12, நஞ்சுண்டாபுரம் சாலையில் உள்ள மாநகராட்சி மயானத்தில் புதிதாக எரிவாயு மயானம் (Gasifier Crematorium) அமைக்க மாநகராட்சி நிதியில் ரூ.91,00,000/-த்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. மேலும், இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண்.50 நாள் 23-07-2007ம் தேதிய ஒப்புதலுடன் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவு K.Dis.No.57119/2007/P3 நாள் 07-11-2007-ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையரக கண்காணிப்பு பொறியாளர் அவர்கள் தனது செயல்முறை கடித எண் 68049/2007/வ.ஆ.1 நாள் 20-12-2007 மூலம் தொழில்நுட்ப அனுமதி வழங்கியுள்ளார்.

எனவே, இப்பணிக்கு 18-03-2008 அன்று கீழக்காணும் நான்கு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

1. திருவாளர்கள். சபரி எலக்ட்ரிக்கல்ஸ் , கோவை
2. திருவாளர்கள். ஏ.ஆர்.எம். இஞ்சினியரிங் கம்பெனி, சென்னை.
3. திருவாளர்கள். எஸ்கோ பர்னஸஸ் , மதுரை
4. திருவாளர்கள். ஜுவாலா எக்யூப்மெண்ட்ஸ் & கன்சல்டன்ஸ், மதுரை

மேற்குறிப்பிட்டுள்ள நான்கு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் கோரப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள்படி திறனாய்வு செய்யப்பட்டதில் வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனையை சபரி எலெக்ட்ரிக்கல்ஸ், கோவை, திருவாளர்கள.ஏ.ஆர்.எம். இஞ்சினியரிங் கம்பெனி, சென்னை, மற்றும் திருவாளர்கள்.எஸ்கோ பர்னஸஸ் ஆகிய நிறுவனங்கள் தகுதி அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளன. திருவாளர்கள். ஜுவாலா எக்யூப்மெண்ட்ஸ் & கன்சல்டன்ஸ், மதுரை அவர்கள் தொழில் நுட்பத்தகுதி பூர்த்தி செய்யவில்லை . மேலும், மேற்படி தேர்வு செய்யப்பட்டுள்ள மூன்று நிறுவனங்கள் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் அளித்துள்ளனர்.

1. திருவாளர்கள். சபரி எலக்ட்ரிக்கல்ஸ் , கோவை — 0.67 % குறைவு
2. திருவாளர்கள். ஏ.ஆர்.எம். இஞ்சினியரிங் கம்பெனி, சென்னை. — 2.22 %குறைவு
3. திருவாளர்கள். எஸ்கோ பர்னஸஸ் , மதுரை — 0.24 %குறைவு

மேற்படி மூன்று நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு 2.22 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திருவாளர்கள். ஏ.ஆர்.எம். இஞ்சினியரிங் கம்பெனி, சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 30-04-2008 ம் தேதியன்று அனுமதி வழங்கியுள்ளது. ஆகவே, மேற்படி ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஏ.ஆர்.எம். இஞ்சினியரிங் கம்பெனி, சென்னை அவர்களின் மதிப்பீட்டுத் தொகைக்கு 2.22 % குறைவான விலைப்புள்ளியினை ஏற்று இப்பணியினை அந்நிறுவனத்தாருக்கு வழங்க மாமன்ற பொருள் வரைவு ஒன்று அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 4616/2007/MD4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 81 நாள் : 28.05.2008**

குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள தி/ள். ஏ.ஆர்.எம். இஞ்சினியரிங் கம்பெனி, சென்னை அவர்கள் மாதவரம், திருவெற்றியூர் ஆகிய நகராட்சிகளில் இப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர். மேற்படி நகராட்சிகளுக்கு ஒரு குழு நேரில் பார்வையிட்டு அந்நிறுவனத்தின் பணிகள் திருப்திகரமாக இருப்பதாக பரிந்துரைத்தால் அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள பணியினை அந்நிறுவனத்திற்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 63**

கோவை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மனைப்பிரிவுகளுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலத்திற்கு டேங்க் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய மாமன்றம் தனது தீர்மான எண்.202 நாள் 10-12-2007ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இப்பணிக்கு 19-02-2008ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளனர்.

1. திருவாளர்கள் பாரதிராஜா வாட்டர் சப்ளையர்ஸ்
2. திருவாளர்கள் ஸ்ரீ ரங்கா டிரான்ஸ்போர்ட்

மேற்கண்ட இரு நிறுவனங்களும் தொழில் நுட்ப தகுதியில் தேர்வு பெற்றுள்ளதால் மேற்படி நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி விலைப்புள்ளி உறை 23-04-2008ம் தேதியன்று திறக்கப்பட்டன. இந்நிறுவனங்கள் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளி அளித்துள்ளனர்.

1. திருவாளர்கள் பாரதிராஜா வாட்டர் சப்ளையர்ஸ் - ரூ. 39.90 /கி.மீ
2. திருவாளர்கள் ஸ்ரீ ரங்கா டிரான்ஸ்போர்ட் - ரூ. 41.40 / கி.மீ

மேற்படி இரு நிறுவனங்களில் குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள் பாரதிராஜா வாட்டர் சப்ளையர்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு 30-04-2008ம் தேதியன்று அனுமதி வழங்கியுள்ளது. எனவே, மேற்படி திருவாளர்கள் பாரதிராஜா வாட்டர் சப்ளையர்ஸ் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியினை வழங்க மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 4480/07/ப.வ

**மா.ந.ம.தீர்மானம் எண் : 82 நாள் : 28.05.2008**

தி/ள். பாரதிராஜா வாட்டர் சப்ளையர்ஸ் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று ஆறுமாத காலத்திற்கு மட்டும் டேங்க் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது.

குடிநீர் விநியோகத்தை மாநகராட்சி லாரிகள் மூலமாக மட்டுமே செய்யும் பொருட்டு DGSD விலை விகிதத்தில் 6 எண்ணிக்கைகள் தண்ணீர் லாரிகள் வாங்க அனுமதிக்கவும், அதற்குண்டாகும் செலவினத்திற்கு அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 64

கோயம்புத்தூா் மாநகராட்சி, ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் நகா்புற ஏழை மக்களுக்கான குடியிருப்புகள் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் குடிசையில்லா கோயம்புத்தூா் நகரம் ஆக்கும் பொருட்டும், ஆட்சேபகரமான பகுதிகளில் உள்ள குடிசைகளுக்கு புதிய மாற்று இடம் தோ்வு செய்து, இந்த ஏழை மக்களுக்கு புதிய ஆர்.சி.சி வீடுகள் அமைக்க வேண்டியதன் அவசியம் பொருட்டும், உக்கடம் பகுதியில் உள்ள மாநகராட்சி கழிவுநீா் பண்ணை இடத்தில் சுமாா் 46.50 ஏக்கா் நிலம் தோ்வு செய்யப்பட்டு அதற்கு தீா்மான எண். 215 நாள். 21.1.08 –ல் மாமன்ற ஒப்புதல் பெற்று அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. தற்சமயம் கூடுதல் இடமாக மொத்தம் 58.50 ஏக்கா் நிலம் தேவைப்படுவதால், கூடுதல் இடமான 12.0 ஏக்கா் நிலத்தினை இத்திட்டத்திற்கு பயன்படுத்திக் கொள்ளவும் இவ்விடத்தை விவசாய நில உபயோகத்திலிருந்து, குடியிருப்பு நில உபயோகமாக மாற்ற தேவையான முன்மொழிவினை அனுப்பவும் மாமன்றம் ஒப்புதல் செய்யலாம்.

அலுவலகக் குறிப்பு- அங்கீகரிக்கலாம் ந.க. எண். 13089 / 2006 / எம்.டி.3.

<u>மா.ந.ம.தீா்மானம் எண் : 83 நாள் : 28.05.2008</u>

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 65

**TIDEL Park Coimbatore Limited** மனையிடம் எஸ். எப். எண். 427 / 1 பாகம், 427 / 2 மற்றும் 436 பாகம் விளாங்குறிச்சி கிராமம் (அவினாசி சாலையில்) இடத்தில் அமைந்துள்ளது. மனையிடத்தில் பேஸ்மெண்ட் - 1 பேஸ் மெண்ட் - 2, பேஸ்மெண்ட் - 3 ஆகிய தளங்களில் வாகன நிறுத்தும் இடமாகவும், தரை தளம், முதல் தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம், மற்றும் நான்காம் தளங்களில் I.T அலுவலகங்கள் கட்டவும் உத்தேசித்து வரைபடங்களை உள்ளூா் திட்டக் குழுமத்திற்கு மாநகராட்சி மூலம் விண்ணப்பித்தாா். உள்ளூா் திட்டக் குழுமம் ந.க. எண். 2113 / 2008 / உதிகு I நாள். 13.5.2008 –ன்படி பிரஸ்தாப மனையிடத்தினை 20.5 மீ உயரத்தில் பலமாடி கட்டிடப்பகுதியாக அறிவிப்பு செய்யக்கோரும் உள்ளாட்சி மன்ற தீா்மானம் சமா்பிக்க தெரிவித்துள்ளனா்.

கோயம்புத்தூா் மாநகராட்சி விளாங்குறிச்சி கிராமம் S.F No. 427/ 1 பாகம், 2, 436 பாகம் பகுதியில் ஒப்புதல் பெற்ற மனைப்பிரிவு ம.வ / ந.ஊ.இ எண் 119 / 2007 மனை எண் . 2 இடத்தில் 9.50 ஏக்கா் பரப்பளவுள்ள உள்ள மனையிடத்தினை 20.5 மீ உயரத்திலான பலமாடி கட்டிடப்பகுதியாக அறிவிப்பு செய்வது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- மன்றம் ஒப்புதல் செய்யலாம் ந.க. எண். 4789 / 08 / எச்2 (வ)

<u>மா.ந.ம.தீா்மானம் எண் : 84 நாள் : 28.05.2008</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 66

மனுதாரா் தி/வா. ஜெம் மருத்துவமனை பிரைவேட் லிமிடெட் அவா்கள் 4.3.2008 –ம் தேதிய விண்ணப்பத்தில் கோயம்புத்தூா் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், சௌரிபாளையம் கிராமம், நகரளவு எண். 1818, 1819/1 மற்றும் 1819/1பி பாகத்தில் தரை மற்றும் 4 தளங்களுடன் கூடிய மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டதற்கு மனையிடத்தில் பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யக் கோரி விண்ணப்பம் செய்துள்ளாா்கள்.

மேற்படி மனையிடம், கோயம்புத்தூர் மாநகராட்சி, இராமநாதபுரம், பங்கஜா மில் சாலையில் உள்ள ஜெம் மருத்துவமனை ஆகும். ஏற்கனவே நிலையில் இருந்த கட்டிடம் போக கூடுதல் கட்டிடம் கட்ட நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களிடமிருந்து தொழில்நுட்ப அனுமதியும், உள்ளுர் திட்டக் குழுமத்திடமிருந்து ந.க.எண். 434 / 2005 / உதிகு – 2 நாள். 25.1.2007 –ல் திட்ட அனுமதியும் பெற்ற பின்னர் மாநகராட்சியில் நிபந்தனைகளின் பேரில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டது. 15.0 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடம் கட்டக் கூடாதென்கிற மாநகராட்சியின் நிபந்தனையை மீறி மனுதாரர் 17.30 மீட்டர் உயரத்திற்கு கட்டிடம் கட்டியுள்ளார். 15.0 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடம் கட்டினால் அடுக்குமாடி மற்றும் பொதுக்கட்டிட விதிகளின் கீழ் இடத்தை அடுக்குமாடி கட்டும் பகுதியாக அறிவித்து, பின்னர் உரிய திருத்திய கட்டிட அனுமதி பெற வேண்டும். கட்டப்பட்ட கட்டிடம் இதர விதிகளை நிறைவு செய்கிறது.

எனவே மேற்படி இடத்தினை அடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்ய மனுதாரரின் கோரிக்கையினை நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு . அனுமதிக்கலாம் ந.க. எண். 4644 / 2008 / இ எச் 2.

**மா.ந.ம.தீர்மானம் எண் : 85 நாள் : 28.05.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. 71-வது வர்டு மாமன்ற உறுப்பினரும் அ.இ.அ.தி.மு.க. மாமன்ற குழுத் தலைவருமான திரு பி. ராஜ்குமார் அவர்களின் ஆட்சேபணை பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 67

பொருள் : குத்தகை – கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் 2008-2009ம் ஆண்டுக்கு ஏல இனம் எண். 2 – மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை உயர்ந்த பட்ச மறு ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு ஒப்புதல் வழங்குவது – தொடர்பாக.

- - - - -

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட ஏல இனம் எண்.2 மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை 2008-2009ம் ஆண்டுக்கு 27-02-2008ம் தேதி நடைபெற்ற பொது ஏலத்தின் போது திரு. ஆர். நாராயணன் என்பவர் கோரிய உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ.37,00,000/-க்கு வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் அனுமதியுடன் மாமன்ற தீர்மான எண்.278, நாள் 27.03.08-ல் உச்சக் கேள்விதாரருக்கு ஒப்படை செய்யலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி ஏலதாரர் திரு. ஆர். நாராயணன் ஏலத் தொகை செலுத்தாத காரணத்தால் ஏல நிபந்தனை 11 - ன்படி அன்னார் செலுத்திய வைப்புத்தொகை ரூ.75,000/- காப்புத்தொகை ரூ.30,000/- மற்றும் சால்வன்சிக்கு பதிலாக ரூ.1,50,000/- ஆக மொத்தம் ரூ.2,55,000/- ஐ பறிமுதல் செய்யவும் மேற்படி இனத்திற்கு மறுஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதி பெற்று மேற்படி தொகை மாநகராட்சி நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

அவசர அவசியத்தை முன்னிட்டு 1.04.2008 முதல் தற்காலிகமாக துறை மூலம் கட்டணம் வசூலிக்க அனுமதி பெற்று மாநகராட்சி பணியாளர்களால் கட்டணம் வசூலிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. 1.04.2008 முதல் 29.04.2008 முடிய துறை மூலம் வசூலான தொகை ரூ.1,24,431/- ஆகும். இந்த இனத்திற்கு 10.04.2008, 16.04.2008 மற்றும் 25.04.2008 ஆகிய தேதிகளில் மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. இதில் ஏலம் கோர யாரும் முன்வரவில்லை

25.04.2008-ம் தேதியன்று நடைபெற்ற மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளியின்போது திரு. J. சுதாகர் என்பவர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி ரூ.26,12,555/- உயர்ந்த பட்ச தொகையாக இருந்தது.

| வ. எண். | இனம் எண். | இனம் | மூன்று ஆண்டு சராசரி ஏலத் தொகை ரூ. | 2007-08 ஏலத் தொகை ரூ. | 2008-09 உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளித் தொகை ரூ. | 2008-09 உச்ச கேள்வித்தாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | மேட்டுப்பாளையம் ரோடு தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை. | 27,85,334 | 33,04,000 | 26,12,555 | திரு. J. சுதாகர் |
| | | 1.04.08 முதல் 29.04.08 முடிய துறை மூலம் கட்டணம் வசூல் | | | 1,24,431 | |
| | | | | | 27,36,986 | |

இனம் எண்.2க்கு கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி தொகை மற்றும் 2007-2008ம் ஆண்டு ஏலத் தொகையைக் காட்டிலும், ஒப்பந்தப்புள்ளித் தொகை மற்றும் துறை மூலமான கட்டண வசூல் ஆகியவைகளின் கூட்டுத் தொகை குறைவாக உள்ளது.

இவ்வினத்திற்கு நான்கு முறை ஏலம் கோரப்பட்டுள்ளதாலும், தொடர்ந்து மறு ஏலம் கோரும் பட்சத்தில் ஒருவரும் ஏலம் கோர முன் வர மாட்டார்கள் எனக் கருத வேண்டியுள்ளதாலும், துறை மூலம் கட்டண வசூலில் ஈடுபடுத்தப்பட்ட மாநகராட்சிப் பணியாளர்களின் சம்பளம் மற்றும் கட்டண ரசீது புத்தகங்கள் அச்சிடும் செலவு ஆகியவற்றை கணக்கிடும்போது துறை மூலமான கட்டண வசூல் மாநகராட்சிக்கு கூடுதல் செலவு ஏற்பட காரணமாக அமையும் என்பதாலும் அவசர அவசியம் கருதி உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகையை அங்கீகரிக்க வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்படைக்கப்பட்டது.

எனவே மேற்படி இனத்தை ஒப்படை செய்ததற்கு பின்னேற்பு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண் 29/2008/அ1(மே)

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 86 நாள் : 28.05.2008</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 68

கோவை மாநகராட்சி கிழக்கு மற்றும் வடக்கு மண்டலம் வார்டு எண்கள் 1,2,3,4,5,6,7,8,11 மற்றும் 16 பகுதிகளுக்கு உண்டான அவிநாசி சாலை மற்றும் திருச்சி சாலைகளில் பிரதான மற்றும் பகிர்மானக் குழாய்களை அகலப்படுத்திய சாலையின் அருகில் புதிய நேர்பாதையில் பதித்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.25,00,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டிற்கு நிர்வாகப் பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதியும் பெறப்பட்டுள்ளது. எனவே, பிரதான மற்றும் பகிர்மானக் குழாய்கள் பதித்து குடிநீர் விநியோகத்தை சீராக முறைப்படுத்த தயாரிக்கப்பட்ட இந்த மதிப்பீடு ரூ25,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண். 11619/07 /எம்டி.2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 87 நாள் : 28.05.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 69

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் பிரிவு எண். 1 வார்டு எண்.3ற்குட்பட்ட ராமன் செட்டியார் பள்ளி முதல் தண்ணீர் பந்தல் 6-வது குறுக்குத் தெரு சந்திப்பு வரை சாலை புதுப்பித்து தருமாறு மாமன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் கோரியுள்ளனர்.

இப்பணிக்கு ரூ.22,25,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண்.3678/08 /எம்டி2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 88 நாள் : 28.05.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 70

கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலம், வார்டு எண்.40-ல் உள்ள மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் இயங்கி வரும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்ட அலுவலகத்திற்கு செல்வதற்கு தனியாக புதிய மாடிப்படி கட்டுதல் மற்றும் கூடுதல் அபிவிருத்திப் பணிகள் செய்ய மதிப்பீடு ரூ.25,00,00/-க்கு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 1171 / 08 /எம்.டி.4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 89 நாள் : 28.05.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 71

கோயமுத்தூர் மாநகராட்சியில் தெருவிளக்குகள் பராமரிப்பு பணியினை கிழக்கு மற்றும் வடக்கு மண்டலத்தை தி /ள் சபரி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனமும் தெற்கு மற்றும் மேற்கு மண்டலத்தை தி/ள் சன் மேக் எண்டர்பிரைசர்ஸ் நிறுவனமும் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பராமரிப்பு செய்து வருகின்றனர். மேற்படி நிறுவனங்களின் ஒப்பந்த காலம் முறையே 30-06-2008 மற்றும் 01-07-2008 உடன் முடிவடைகிறது. மேலும் மேற்படி நிறுவனத்தார்கள் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி தெருவிளக்கினை பராமரிப்பு செய்யாததால் பலமுறை அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் மேற்படியார் தெருவிளக்குகள் சரிவர பராமரிக்காததை குறித்து பொதுமக்களிடமிருந்தும் மாமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் புகார்கள் பெறப்பட்டன. இது குறித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் மாமன்றம் தனது தீர்மான எண்.281 நாள் 27-03-2008ல் மேற்படி நிறுவனங்களை கறுப்பு பட்டியலில் சேர்க்கலாம் என தீர்மானம் நிறைவேற்றியது.

இந்நிலையில் 01-07-2008 முதல் தெருவிளக்குகள் பராமரிப்பு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோர தற்போது பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, மேற்படி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஒப்பந்ததாரர்களிடம் தெருவிளக்குகள் பராமரிப்பு பணியை ஒப்படைக்கும் நாள் வரை உள்ள காலத்திற்கு தற்பொழுது பராமரிப்பு பணியினை செய்து வரும் மேற்படி நிறுவனத்தாரர்களையே ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி தெருவிளக்குகள் பராமரிப்பு பணியினை செய்திட அனுமதி வழங்கிடவும் அதனால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை ஏற்கவும் உத்திரவு வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் முடிவு செய்யலாம் ந.க.எண்.7528 / 2004 / எம்.டி.4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 90 நாள் : 28.05.2008**

புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி வேறு நிறுவனத்திடம் ஒப்படைக்கும் காலம்வரை, தெருவிளக்குகள் பராமரிப்பு பணியை கிழக்கு மற்றும் வடக்கு மண்டலங்களில் தி/ள். சபரி எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனமும், தெற்கு மற்றும் மேற்கு மண்டலங்களில் தி/ள். சன்மேக் எண்டர்பிரைசஸ் நிறுவனமும் தற்போதுள்ள ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி மேற்கொள்ள அனுமதிக்கவும் அதற்காகும் செலவினத்தை ஏற்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 72

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் பொறியியல் பிரிவு எண். 2 வார்டு எண். 9ல் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளான ரிலையன்ஸ் கார்டன்ஸ் மற்றும் கிருஷ்ணா கார்டன்ஸ் பகுதியில் உள்ள மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்ட பொது ஒதுக்கீட்டு இடங்களுக்கு சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் சிறுவர்களுக்கும் பொதுமக்களுக்கும் பயன்படும் வகையில் சிறுவர் விளையாட்டு திடல் மற்றும் பூங்கா அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 24,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-அனுமதிக்கலாம். ந.க. எண்.5993 /08/எம்டி2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 91 நாள் : 28.05.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 73

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் பொறியியல் பிரிவு எண். 1 வார்டு எண். 4ற்குட்பட்ட எஸ்.ஐ.எச்.எஸ். காலனி பகுதியில் புதிதாக மழைநீர் வடிகால் அமைத்தல் பணிக்கு ரூ24,90,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண்.5562/08/எம்.டி.2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 92 நாள் : 28.05.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 74

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு எண். 2 வடக்கு மண்டல அலுவலகத்தில் 2-வது தளம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.25,00.000/- க்கு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 11646 /07 /எம்டி2

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 93 நாள் : 28.05.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 75

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு எண். 5 வார்டு எண். 17 வி.ஜி. ராவ் நகரில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் வகுப்பறைகள் கட்டுதல் பணிக்கு என தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 25,00,000/-கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல். “எ” பிளாக்.

ஆவராம்பாளையம் வி.ஜி.ராவ் நகரில் வகுப்பறைகள் கட்டக் கோரி பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் மாமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மாநகராட்சி ஆணையாளரின் உத்தரவுப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டினை உதவி நிர்வாகப் பொறியாளர் மற்றும் நிர்வாகப் பொறியாளர் (கி) அவர்கள் நேரில் ஆய்வு செய்து தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.25,00,000/-க்கு தொழில் நுட்ப அனுமதி அளித்துள்ளார்கள்.

மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -அனுமதிக்கலாம். ந.க.எண்.03045 /08 /எம்டி2

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 94 நாள் : 28.05.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 76

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு எண். 5 வார்டு எண். 17 வி/ஜி ராவ் நகரில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் வகுப்பறைகள் கட்டுதல் பணிக்கு என தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 25,00,000/-க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல். “பி” பிளாக்.

ஆவராம்பாளையம் விஜி. ராவ் நகரில் வகுப்பறைகள் கட்டக் கோரி பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் மாமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மாநகராட்சி ஆணையாளரின் உத்தரவுப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டினை உதவி நிர்வாகப் பொறியாளர் மற்றும் நிர்வாகப் பொறியாளர் (கி) அவர்கள் நேரில் ஆய்வு செய்து தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.25,00,000/-க்கு தொழில் நுட்ப அனுமதி அளித்துள்ளார்கள்.

மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-அனுமதிக்கலாம். ந.க. எண். 03044 / 08/எம்டி2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 95 நாள் : 28.05.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 77**

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் 12வது வார்டு. நஞ்சுண்டாபுரம் கழிவு நீர் பண்ணையில் 150 ஹச்.பி. மாற்று நீர்மூழ்கி பம்புசெட் மோட்டார் அமைத்தல் பணிக்கு ரூ.24,80,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு மதிப்பீடு ரூ.24,80,000/-த்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-அனுமதிக்கலாம். ந.க.எண்.5895 / 08/எம்டி4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 96 நாள் : 28.05.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 78**

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு. எண்.38ல் உள்ள நவாப் ஹக்கீம் சாலை மழைநீர் வடிகால் திரும்ப கட்டுதல் பணி செய்தல் மதிப்பீடு ரூ. 25,00,000/-

மேற்கண்ட பொருளின்படி நவாப் ஹக்கீம் சாலை பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்து உள்ளதால், மழைநீர் செல்வதில் தடை ஏற்பட்டு மழைநீர் சாலை பகுதியில் சென்று சாலை பழுதடையும் நிலை ஏற்பட்டுள்ளது, எனவே, இதனை தவிர்க்கும் பொருட்டு, இம்மழைநீர் வடிகாலினை இடித்து திரும்ப கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ25,00,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பணியின் அத்தியாவசியம் கருதி இப்பணியினை செய்ய நிர்வாக அனுமதி வேண்டி, மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண்.4501 / 08/எம்டி4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 97 நாள் : 28.05.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 79**

**பொருள் - வணிக வளாக கடைகள் - கோவை மாநகராட்சி -வடக்கு மண்டலம் 26.03.08-ல் நடைபெற்ற மறு ஏலம் ஒப்பந்தப்புள்ளி கேட்கப்பட்ட உச்ச கேள்வியை அங்கீகரித்து கடைகளை ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக**

-------

கோவை மாநகராட்சியில் வடக்கு மண்டலத்திற்குட்பட்ட காலியாக உள்ள வணிக வளாக கடைகளுக்கு 26.03.08ல் நடைபெற்ற மறு ஏலம் - ஒப்பந்தப்புள்ளியில் ஆம்னி பேருந்து நிலையத்திற்கு அருகில் ராதாகிருஷ்ணா சாலையில் அமைந்துள்ள கடை எண். 5 மற்றும் 6 கடைகள் மற்றும் சத்திரோடு ஆம்னி பேருந்து நிறுத்தத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கடைகள் ஆகியவற்றிற்கு ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோரியதில் கீழ்கண்ட உச்ச கேள்விகள் கேட்கப்பட்டன.

ஆம்னி பேருந்து நிறுத்த கடைகள் (டாக்டர் ராதாகிருஷ்ணா ரோடு )

| வ.எண். | ஏல இனம் | கடை எண் | ஏலதாரர் பெயர் | உச்ச கேள்வி |
|---|---|---|---|---|
| 1. | ராதாகிருஷ்ணாரோடு | 5 | திரு.கிருஷ்ணன் | 7890 ( ஒப்பந்தப்புள்ளி ) |
| | | | திரு. பி ராமசாமி | 3100 |
| 2. | ராதாகிருஷ்ணாரோடு | 6 | திருமதி. லட்சுமி | 3050 |
| | | | திரு.எம். ஹரிகிருஷ்ணன் | 2950 |
| | | | பி. ராமசாமி | 3000 |
| | | | கிருஷ்ணன் | 7890 ( ஒப்பந்தப்புள்ளி ) |

ஆம்னி பேருந்து நிறுத்த கடைகள் (சத்தி ரோடு )

| வ.எண். | ஏல இனம் | கடை எண் | ஏலதாரர் பெயர் | உச்ச கேள்வி |
|---|---|---|---|---|
| 3. | சத்திரோடு ( ஆம்னி ) பேருந்து நிறுத்துமிடம் | 16ஏ | ஜே.ஜே. கேட்ஸ் | 3350 |
| | | | திரு.அன்.அப்துல்அமீது | 3300 |
| 4. | சத்திரோடு ( ஆம்னி ) பேருந்து நிறுத்துமிடம் | 17ஏ | திருமதி கலா | 3500 |
| | | | டி.ரமேஷ்குமார் | 3700 |
| 5. | சத்திரோடு ( ஆம்னி ) பேருந்து நிறுத்துமிடம் | 18ஏ | தாயம்மாள் | 3725 |
| | | | ஸ்ரீபூரணி நிட்டார்ஸ் பி லிட் | 3750 |
| | | | ராஜு | 4155 ( ஒப்பந்தப்புள்ளி ) |
| 6. | சத்திரோடு ( ஆம்னி ) பேருந்து நிறுத்துமிடம் | 19ஏ | கே.ஆர்.ஜெகதீசன் | 3500 |
| | | | எஸ். மாதவன | 3600 |
| | | | ராஜு | 3855 ( ஒப்பந்தப்புள்ளி ) |
| 7. | சத்திரோடு ( ஆம்னி ) பேருந்து நிறுத்துமிடம் | 20ஏ | ஏ. புருஷோத்தமன் | 4100 |
| | | | டி.ரமேஷ் | 4050 |
| 8. | சத்திரோடு ( ஆமனி ) பேருந்து நிறுத்துமிடம் | 21ஏ | ஜி.வி.ஆனந்தகுமார் | 3400 |
| | | | எஸ்.சரண்யா | 3340 |

கடை எண் 5க்கு திரு. கிருஷ்ணன் உச்ச ஏலத் தொகையாக ரூ.7890/- ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். கடந்த 2006 ஆம் ஆண்டு மேற்கண்ட கடைக்கு ரூ.8100/- உச்ச கேள்வியாக கேட்கப்பட்டிருந்தது. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக கடைகள் பொறுப்பேற்கப்படாமல் இருந்ததால் வைப்புத் தொகைகள் பறிமுதல் செய்யப்பட்டு 26.03.08 அன்று மறு ஏலம் நடத்தப்பட்டது. தற்போது அரசு மதிப்பு ரூ.3700/- க்கு கூடுதலாக கேட்டுள்ளதால், தற்போது கோரப்பட்டுள்ள உச்ச கேள்வியான ரூ. 7890/- ஐ ஏற்று கடையை ஒதுக்கீடு செய்யலாம்.

கடை எண் 6-க்கு திரு. கிருஷ்ணன் என்பவர் உச்ச ஏலத் தொகையாக ரூ.7890/- ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். கடந்த 2006 ஆம் ஆண்டு மேற்கண்ட கடைக்கு ரூ.5500/- உச்ச கேள்வியாக கேட்கப்பட்டிருந்தது. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக கடைகள் பொறுப்பேற்கப்படாமல் இருந்ததால் வைப்புத் தொகைகள் பறிமுதல் செய்யப்பட்டு 26.03.08 அன்று மறு ஏலம் நடத்தப்பட்டது, தற்போது அரசு மதிப்பு ரூ.3700/- க்கு கூடுதலாக கேட்டுள்ளதால், தற்போது கோரப்பட்டுள்ள உச்ச கேள்வியான ரூ. 7890/-ஐ ஏற்று கடையை ஒதுக்கீடு செய்யலாம்.

சத்தி ரோடு (ஆம்னி பேருந்து நிறுத்தம் ) கடை எண், 16ஏ-க்கு ஜே.ஜே. கேப்ஸ் நிறுவனம் உச்ச கேள்வியாக ரூ.3350/- கேட்டுள்ளார். கடந்த முறை 26.02.08 அன்று ஏலம் கோர எவரும் முன் வரவில்லை. தற்போதைய ஏலத்தில் அரசு மதிப்பீடான ரூ.3700/-ஐ காட்டிலும் குறைவாக உள்ளது.

கடைஎண் 17ஏ- க்கு திரு. டி. ரமேஷ்குமார் உச்ச கேள்வியாக ரூ.3700/- கேட்டுள்ளார். இது கடந்த முறை 26.02.08 அன்று கேட்கப்பட்ட உச்ச கேள்வியான ரூ.2600/-விட அதிகம். மேலும் அரசு மதிப்பிற்கு கேட்டுள்ளதால் உச்ச கேள்வியை ஏற்கலாம்.

கடைஎண் 18ஏ- க்கு திரு, ராஜு என்பவர் உச்ச கேள்வியாக ஒப்பந்தப்புள்ளி மூலம் ரூ.4155/- கேட்டுள்ளார், இது கடந்த முறை 26.02.08 அன்று கேட்கப்பட்ட உச்ச கேள்வியான ரூ.2500/-ஐ விடவும். அரசு மதிப்பீடான ரூ.3700/-ஐக் காட்டிலும் கூடுதலாகும்.

கடைஎண் 19ஏ- க்கு திரு, ராஜு என்பவர் உச்ச கேள்வியாக ஒப்பந்தப்புள்ளி மூலம் ரூ.3855/- கேட்டுள்ளார், இது கடந்த முறை 26.02.08 அன்று கேட்கப்பட்ட உச்ச கேள்வியான ரூ.3600/-ஐ விடவும். அரசு மதிப்பீடான ரூ.3700/-ஐக் காட்டிலும் கூடுதலாகும்.

கடை எண். 20ஏ-க்கு திரு.ஏ. புருசோத்தமன் ரூ.4100/- உச்ச கேள்வியாக கேட்டுள்ளார். கடந்த முறை 26.02.08 அன்று ஏலம் கோர எவரும் முன் வரவில்லை. தற்போதைய ஏலத்தில் அரசு மதிப்பீடான ரூ.3700/-ஐ காட்டிலும் தற்போதைய உச்ச கேள்வி கூடுதலாக உள்ளது.

கடை எண். 21ஏ-க்கு திரு.ஜி.வி. ஆனந்தகுமார் ரூ.3400/- உச்ச கேள்வியாக கேட்டுள்ளார். இது அரசு மதிப்பீடான ரூ.3700/-ஐ காட்டிலும் குறைவு. ஆனால் கடந்த முறை 26.02.08 அன்று கேட்கப்பட்ட உச்ச கேள்வியான ரூ. 2450/-ஐ காட்டிலும் கூடுதலாகும்.

எனவே ராதாகிருஷ்ணா சாலை கடை எண். 5 மற்றும் 6 சக்தி ரோடு. கடை எண். 16ஏ முதல் 21 முடிய உள்ள கடைகளுக்கான உச்சகேள்விகளை அங்கீகரித்து ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 15 தேதி 22.4.2008-ன்படி ஒப்புதல் அளித்துள்ளது. இது சம்பந்தமாக மாமன்றத்தின் பரிசீலனைக்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு -உச்ச கேள்விகளை அங்கீகரிக்கவும்.ஏல விளம்பர கட்டண

செலவினங்களை ஏற்கவும் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

ந.க.எண். 1935/ 2008/ அ4 ( வ )

**மா.ந.ம.தீர்மானம் எண் : 98 நாள் : 28.05.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 80**

அரசாணை எண். 131. ஊ.வ. (ம) பஞ்சாயத்து ராஜ் துறை நாள். 16.3.2007 –ன்படி நகர்புற மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், மற்றும் தரம் தாழ்த்துதல், குறைத்தல், அவ்வமைப்புகளை பிரித்தல் மற்றும் சேர்த்தல் பற்றிய நடவடிக்கையில் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் குறிச்சி, குனியமுத்தூர், கவுண்டம்பாளையம் ஆகிய நகராட்சிகள், இருகூர், காளப்பட்டி, சரவணம்பட்டி, துடியலூர், மதுக்கரை, வடவள்ளி, வெள்ளலூர், சின்னவேடம்பட்டி, பேரூர், வீரகேரளம், வேடபட்டி, ஆகிய பேருராட்சிகள், வெள்ளக்கிணர், விளாங்குறிச்சி, வெள்ளாணைப்பட்டி, சுண்டக்காமுத்தூர், சித்திரைச்சாவடி, கிழக்கு மற்றும் மேற்கு, சோமையம்பாளையம், பன்னிமடை, ஒட்டர்பாளையம், பட்டணம், மயிலம்பட்டி, நீலாம்பூர், மலுமிச்சம்பட்டி, சீராப்பளையம், பேரூர் செட்டிபாளையம் மற்றும் குருடம்பாளையம் ஆகிய கிராம பஞ்சாயத்துக்களையும் சேர்த்து 30 உள்ளாட்சி பகுதிகளை இணைப்பது குறித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில், மாமன்றம் தனது தீர்மான எண். 206 நாள். 10.12.2007 –ல் பொருள் குறித்து மாமன்ற அனைத்து கட்சி தலைவர், நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் விவாதித்து முடிவு செய்து மீண்டும் மன்றத்திற்கு பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது' என தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

21.4.2008 அன்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அனைத்து கட்சி மாமன்ற உறுப்பினர்கள் விவாத கூட்டத்தின் கூட்ட நடவடிக்கையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் மேற்கண்ட 30 உள்ளாட்சி அமைப்புகளை மாநகராட்சியுடன் இணைக்க கருத்தாய்வு நடைபெற்றுள்ளதால் அதனுடைய வளர்ச்சி திட்ட பணிகளை எதிர்காலத்தில் மாநகராட்சி தான் செய்ய வேண்டி உள்ளதால் எல்லோரும் தங்களது கருத்துக்களை தெளிவாக எடுத்து சொல்லுமாறு கேட்டுக் கொண்டார்.

எதிர்கட்சி தலைவர் குறிப்பிடுகையில் நகரின் கிழக்கு பகுதியில் உள்ள இருகூர் பேருராட்சியும், ஒட்டர்பாளையம், பட்டணம் ஆகிய கிராம பஞ்சாயத்துகளும், தற்போது புதியதாக உருவாகும் திருப்பூர் மாவட்டத்துடன் இணைக்கப்பட உள்ளதால் கோயம்புத்தூர் மாநகராட்சி எடுப்பதற்கு வாய்ப்பில்லை எனவும், நகரின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள தொண்டாமுத்தூர் விடுபட்டுள்ளதை மாநகராட்சி உடன் சேர்க்க வேண்டுமெனவும், கோயம்புத்தூர் நகரின் கிழக்கு, வடக்கு, தெற்கு பகுதிகளில் அதிக அளவில் தொழில் நிறுவனங்கள் உள்ளதால் இப்பகுதிகளை சேர்க்கவும், நகரின் மேற்கு பகுதியில் ஆய்வு செய்து விடுபட வேண்டியிருந்தால் அவைகளை பற்றிய விபரங்களை மாமன்றத்தில் தெரிவிப்பதாக தெரிவித்துள்ளார். மேற்கண்ட கருத்துக்கள் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு . மாமன்றம் முடிவு செய்யலாம் ந.க. எண். 11533 / 07 / எம்.எச். 5.

**<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 99 நாள் : 28.05.2008</u>**

மாமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக்கூட்டி, நன்கு ஆய்வு செய்து மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 81

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், சிங்காநல்லூர் கிராமம் க.ச. எண்கள். 130 / 1டி, 3ஏ3, 3பி, 131 / 1ஏ, 1பி, 2, 132 / 1, 2, 133 மற்றும் 134/ 1-ல் உள்ள 15.71 ஏக்கர் பரப்புள்ள நிலத்தினை தொழிற்சாலை நில உபயோகத்திலிருந்து வணிக மற்றும் குடியிருப்பு உபயோகப்பகுதியாக நில உபயோக மாற்றம் செய்ய அனுமதி கோரி 17.10.2007ல் மனுதாரர் தி / வா தியாகராஜா மில்ஸ் லிமிடெட், சிங்காநல்லூர் கோயம்புத்தூர் அவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள்.

மேற்படி மனுதாரரின் மனையிடம் திருச்சி சாலையில் மாநகராட்சி வார்டு எண். 4-ல் அமைந்துள்ளது. சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 34 –ல் அமைந்துள்ள முழுமைத் திட்டத்தின்படி, மனையிடம்

| க.ச. எண் | பரப்பு | முழுமைத்திட்டத்தின்படி உபயோகம் |
|---|---|---|
| 130 – 1டி | 0.08 | விவசாயம் |
| 130 – 3ஏ3 | 2.40 | விவசாயம் |
| 131 – 1ஏ | 2.43 | விவசாயம் |
| 131 – 1பி | 2.10 | விவசாயம் |
| 130 – 3பி | 0.02 | தொழிற்சாலை |
| 131 – 2 | 0.29 | தொழிற்சாலை |
| 132 – 1 | 1.05 | தொழிற்சாலை |
| 132 – 2 | 0.02 | தொழிற்சாலை |
| 133 | 5.95 | தொழிற்சாலை |
| 134 – 1 | 1.37 | தொழிற்சாலை |

------------
15.71 ஏக்கர் அமைந்துள்ளது.
-----------

மேற்படி, 15.71 ஏக்கர் நிலப்பரப்பில் தியாகராஜர் மில்ஸ் லிட் என்கிற தொழிற்சாலை வளாகத்தினுள் உள்ளது. தொழிற்சாலை மூடப்பட்ட நிலையில், தொழிற்சாலை கட்டிடங்கள் இடிக்கப்படாத நிலையில் உள்ளது. நகரசார் ஆய்வரின் அறிக்கை, வட்டாட்சியர் அவர்களின் சான்றுகள், சர்வே வரைபடநகல், நில உரிமை ஆவணங்கள், வில்லங்க சான்று, வரைபடம், சுற்றுப்புற சார்பு வரைபடம், முழுமைத்திட்ட சுருக்க நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி பஞ்சாலைத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ள நிலையில் உள்ளதாலும் மனுதாரர் அதனை மாற்று உபயோகத்திற்கு பயன்படுத்த உள்ளதாலும், மேற்காணும் காலைகளில் உள்ள தொழிற்சாலை மற்றும் விவசாய நில உபயோகத்தில் உள்ள 15.71 ஏக்கர் பரப்புடைய நிலத்தினை வணிக மற்றும் குடியிருப்பு நில உபயோகப் பகுதியாக நில உபயோக மாற்றம் செய்ய மனுதாரரின் கோரிக்கையினை மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டு நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை வழியாக அரசுக்கு அனுப்ப நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக் குழுவின் முடிவுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீர்மான எண். 49 நாள். 19.5.2008 -ல் “ தொழிற்சாலை மற்றும் விவசாய உபயோகத்திலிருந்து வணிக மற்றும் குடியிருப்பு நில உபயோக பகுதியாக மாற்றக் கோரும் இப்பொருள் மாமன்றத்தின் முடிவுக்கு பரிந்துரைக்கப்படுகிறது” என தீர்மானம் நிறைவேற்றி உள்ளதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - நில உபயோக மாற்றம் செய்யலாம் ந.க. எண். 14569 / 07/ எச்1 (கி)

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 100 நாள் : 28.05.2008</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள நில உபயோக மாற்றம் செய்ய அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது. பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்கு காலியிட வரி முதலிய வரியினங்கள் நிலுவை இருப்பின் அதனை வசூலிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 82

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாகங்களில் காலியாக உள்ள கடைகளுக்கு 27.2.2008 ம் தேதியில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டது. இதில் கீழ்குறிப்பிட்டுள்ள கடைகளுக்கு மட்டும் உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரப்பட்டுள்ளன.

| வ.எண் | இனம் | கடைஎண் (அளவு) | ஏலதாரர் பெயர் | மாத வாடகை மாதம் ஒன்றுக்கு |
|---|---|---|---|---|
| 1 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலைய வணிக வளாக கடை எண். 1க்கு தென்புறம் உள்ள காலியிடம் | **1** **(24 x 6)** | ஆர். ராஜா | **ரூ.4,500/-** |
| 2 | அவினாசி ரோடு வணிக வளாகம் | **22** **(10 x 12)** | எம்.ஏ.சபேர் அலி | **ரூ.9,100/-** |

மேற்படி உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ள கடைகளின் ஏலக் கோரிக்கையினை ஏற்பது தொடர்பாக கணக்குக் குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. கணக்குக் குழு தனது தீர்மான எண். 16 நாள் 17.4.2008 ல் மேற்படி பொருளினை அனுமதிக்கலாம் என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மேற்படி கணக்குக் குழுவின் தீர்மானத்தின்மீது மன்றத்தின் அனுமதிக்கு மன்றப் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் **1001/2007/அ10**

**மா.ந.ம.தீர்மானம் எண் : 101 நாள் : 28.05.2008**

**கணக்குகள் குழு தீர்மானம் எண். 16 நாள் 17.4.08-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**